# ஆண்டறிக்கை

# 2021

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

## நோக்கு

சிறுவர்களுக்கு சாதகமானதும், பாதுகாப்பானதுமான சூழலொன்றை கட்டியெழுப்புதல்.

## செயற்பணி

சிறுவர்கள் சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களில் இருந்தும் விடுதலை பெற்றிருப்பதை உறுதிசெய்தல்.

**2021 ஆம் ஆண்டுக்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் சபை**

| **தொடர் இல.** | **பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள்** | **பதவிப் பெயரும், நியமனம் பெற்ற திகதியும்** | **கடமையாற்றும் இடத்தின் முகவரி** |
|---|---|---|---|
| 01 | பேராசிரியர் திரு முதித விதானபதிரன<br><br>திரு உதயகுமார அமரசிங்க | தவிசாளர்<br>(2019 டிசம்பர் முதல் 2021 அக்டோபர் மாதம் வரை)<br><br>தவிசாளர்<br>(2021 நவம்பர் மாதம் 15 முதல்) | நீதிமன்ற மருத்துவவியல் பற்றிய பேராசிரியர், நீதிமன்ற மருத்துவக் கல்லூரி, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகம், நுகேகொடை<br><br>குற்றவியல் பற்றிய சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகம், நுகேகொடை |
| 02 | சட்டத்தரணி திருமதி சுஜாதா அழஹப்பெரும | பிரதித் தவிசாளர்<br>(2020 சனவரி 01 ஆம் திகதி முதல்) | ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி |
| 03 | திரு ஹேமமால் கஸ்துரிஆரச்சி (அவதானிப்பாளர்) | பணிப்பாளர் நாயகம் (2020 அக்டோபர் மாதம் முதல்) | நிதி அமைச்சு, லோட்டஸ் வீதி, கொழும்பு |
| 04 | டாக்டர் திருமதி சுவர்ணா விஜேதுங்க | சிரேஷ்ட உளவியல் மருத்துவ நிபுணர் (சிறுவர் மற்றும் இளம்பருவ) (2020 சனவரி மாதம் முதல்) | ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை, பொரளை |
| 05 | டாக்டர் திரு சேனக குணதிலக்க | சிரேஷ்ட சிறுவர் நோயியல் மருத்துவ நிபுணர் (2020 சனவரி மாதம் முதல்) | மாவட்ட வைத்தியசாலை, பதுளை |
| 06 | கலாநிதி பதித்ரா கொடமுன்னே | சிரேஷ்ட விரிவுரையாளர்<br><br>களனி பல்கலைக் கழகம் (2021 பெப்ருவரி மாதம் முதல்) | களனி பல்கலைக் கழகம் |

| | | | |
|---|---|---|---|
| 07 | திரு ஜே.ஏ.டி.எம்.பீ.என். ஜயகொடி<br><br>திரு அஜித் ரோஹன | பிரதிப் பொலிஸ் மாஅதிபர் (2020 மார்ச் மாதம் முதல் 2021 யூன் மாதம் வரை)<br><br>சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் - குற்றச்செயல் மற்றும் போக்குவரத்து, திட்டமிட்ட குற்றச் செயல்கள், மகளிர் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுத்தல், போதைவஸ்து மற்றும் தேர்தல்கள் (2021 யூலை மாதம் முதல்) | பொலிஸ் திணைக்களம், 331, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு |
| 08 | திரு சுசந்த பாலபட்டபெந்தி | மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் (2020 யூன் மாதம் முதல்) | சட்ட மாஅதிபர் திணைக்களம், கொழும்பு 12 |
| 09 | திருமதி சந்திராணி சேனாரத்ன | செயலாளர், (2020 சனவரி மாதம் முதல் 2021 யூலை மாதம் வரை) | தேசிய சம்பளங்கள் ஆணைக்குழு, அறை இலக்கம் 2-116, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம், கொழும்பு 07 |
| 10 | திருமதி அசோக அலவத்த | முன்னாள் செயலாளர் (2021 யூலை மாதம் முதல்) | முன்னாள் செயலாளர், மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, பாலர் பாடசாலை மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு |
| 11 | டாக்டர் திருமதி ஹிரந்தி விஜேமான்ன | சுயாதீன சிறுவர் உரிமைகள் பற்றிய ஆலோசகர் (2020 சனவரி மாதம் முதல் 2021 யூலை மாதம் வரை) | |
| 12 | கலாநிதி திரு கபில பண்டார | பீடாதிபதி, கல்விப் பீடம், கொழும்பு பல்கலைக் கழகம்<br>(2020 சனவரி மாதம் முதல்) | கல்விப் பீடம், கொழும்பு பல்கலைக் கழகம், 94, குமாரதுங்க முனிதாச மாவத்தை, கொழும்பு 07 |

| | | | |
|---|---|---|---|
| 13 | திரு உதயகுமார அமரசிங்க | சிரேஷ்ட விரிவுரையாளர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகம் (2020 சனவரி மாதம் முதல் 2021 நவம்பர் 14 ஆம் திகதி வரை) | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகம் கங்கொடவில நுகேகொட |
| 14 | திரு சுதீர நிலங்க பண்டார | பிரதி ஆணையாளர் (2021 ஆகஸ்ட் மாதம் முதல்) | நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், IIஆம் கட்டம், செத்சிறிபாய, பத்தரமுல்லை |
| 15 | திரு பீ.கே. சந்திரகீர்த்தி | தொழில் ஆணையாளர் நாயகம் (2020 அக்டோபர் மாதம் முதல்) | தொழில் திணைக்களம், கிருல வீதி, கொழும்பு 05 |
| 16 | திருமதி சுஜீவா பல்லியகுருகே | பணிப்பாளர் (அபிவிருத்தி) (2020 சனவரி மாதம் முதல் 2021 யூன் மாதம் வரை) | மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, பாலர் பாடசாலை மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு |
| 17 | திரு எம்.எச்.ஜி. பண்டார | மேலதிக செயலாளர் (நிருவாகம்) (2021 ஆகஸ்ட் மாதம் முதல்) | மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, பாலர் பாடசாலை மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு |

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான சபை உறுப்பினர்கள்

| தொடர் இல | சபை உறுப்பினர்களின் பெயர்கள் | பதவிப் பெயரும், நியமனம் பெற்ற காலஎல்லையும் | கடமையாற்றும் இடத்தின் முகவரி |
|---|---|---|---|
| 01 | திருமதி ஹசினி பல்லேவெல | மேலதிகச் செயலாளர் (நிருவாகம்) (2020 மே மாதம் முதல்) | பாதுகாப்பு அமைச்சு, 15/5, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 03 |
| 02 | டாக்டர் லால் பனாபிட்டிய | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (2021 மார்ச் மாதம் முதல்) | சுகாதார அமைச்சு,சுவசிரிபாய, இல. 385, சங்கைக்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10 |
| 03. | திரு என்.ஏ.கே. விஜேநாயக்க | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (2020 யூன் மாதம் முதல்) | மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, பாலர் பாடசாலை மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு |
| 04 | திருமதி ரோஷினி ஹெட்டிகே | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (2020 யூன் மாதம் முதல்) | நீதி அமைச்சு, மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி, நீதிமன்ற மாவத்தை, கொழும்பு 12 |
| 05 | திருமதி எம்.சீ.எஸ். தேவசுரேந்திர | பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்)<br>(2020 மே மாதம் முதல்) | தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, 163, எசிதிசி மெதுர, கிருலபன மாவத்தை, பொல்ஹேன்கொட, கொழும்பு 05 |
| 06 | திரு கே.பி.என்.ரீ.என். தேவப்பிரிய | சிரேஷ்ட உதவிச் செயலாளர், (நிருவாகம் 1)<br>(2020 யூன் மாதம் முதல் | கல்வி அமைச்சு, பன்னிப்பிட்டிய வீதி, இசுருபாய, பத்தரமுல்ல |
| 07 | திருமதி மாதவீ குணவர்த்தன | ஆணையாளர் (சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு)<br>(2020 மே மாதம் முதல் 2021 பெப்ருவரி மாதம் வரை) | தொழில் திணைக்களம், கிருல வீதி, கொழும்பு 05 |

| | | | |
|---|---|---|---|
| | திருமதி ஏ.எம்.ஜி.என்.டி. சுமணசேன | ஆணையாளர் (சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு) (2021 ஏப்ரல் மாதம் முதல்) | தொழில் திணைக்களம், கிருல வீதி, கொழும்பு 05 |
| 08 | டாக்டர் திரு எச்.எஸ்.ஆர். பெரேரா | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (மக்கள் சேவைகள் 11)<br><br>(2020 யூன் மாதம் முதல்) | சுகாதார அமைச்சு, 385, பத்தேகம விமலவங்ச தேர மாவத்தை, கொழும்பு 10 |
| 09 | திரு சீ.எச். கமகே | சிரேஷ்ட உதவிச் செயலாளர்<br><br>(2020 யூன் மாதம் முதல் 2021 யூன் மாதம் வரை) | சுற்றுலா அமைச்சு,<br><br>2 ஆம் மாடி,<br><br>51பீ,<br><br>யோர்க் வீதி,<br><br>கொழும்பு 01. |
| 11 | திருமதி வீ.சீ.டி. சில்வா | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | (மாகாண சபைகள்), 330, யுனியன் பிளேஸ், கொழும்பு 02 |

| | உள்ளடக்கம் | பக்க இலக்கம் |
|---|---|---|
| 1. | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தவிசாளரின் மீளாய்வு | 1 – 2 |
| 2. | அறிமுகம் | 2 – 3 |
| 3. | பிரதான செயற்பணி | 4 – 5 |
| 4. | நிறுவனக் கட்டமைப்பு | 6 – 6 |
| 5. | 2021ஆண்டுக்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் நிறுவன ஒழுங்கமைப்பு | 7 – 11 |
| | **செயல் நிறைவேற்றம்** | |
| 6. | சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கைக்குரிய ஐந்து வருட செயற்றிட்டத்தை தயார் செய்தல். | 12 – 12 |
| 7. | முன்னேற்றமும், எதிர்கால நோக்கும் சிறுவர் பகல்நேர அரவணைப்பு நிலையங்களுக்கான தேசிய கொள்கையை தயார் செய்தல். | 12 – 12 |
| 8. | இலங்கையின் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் தொடர்பான தேசிய வழிகாட்டல்கள் மற்றும் ஆகக் குறைந்த தரநியமங்களை தயார் செய்தல் | 12 – 12 |
| 9. | சிறுவர்களில் தாக்கம் செலுத்தும் சட்டங்களை திருத்தம் செய்தல் | 12 – 14 |
| 10. | மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை தொழில்நுட்ப வட்டங்களாக இயங்கச் செய்தல். | 14 – 14 |
| 11. | அச்சுறுத்தலான சிறுவர்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் காரணிகளை வரைபடமாக்கல் | 14 – 14 |
| 12. | சிறுவர் பாதுகாப்பு பற்றி அரசியல்வாதிகளை விழிப்புணர்வூட்டல் | 14 – 14 |
| 13. | அச்சுறுத்தலான நிலையிலுள்ள சிறுவர்களுக்கு கல்வி உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் | 14 – 15 |
| 14. | அனர்த்த / அவசர நிலைமைகளின் போது சிறுவர் பாதுகாப்பை உறுதி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் | 15 – 15 |
| 15. | மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் சிறுவர் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் | 15 – 15 |
| 16. | சுகாதார தொழில்வல்லுனர்கள் மற்றும் பதவியணியை விழிப்புணர்வூட்டும் | 15 - 15 |

| | | |
|---|---|---|
| | தேசிய நிகழ்ச்சித்திட்டம் | |
| 17. | பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை அமுல்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் | 16 – 16 |
| 18. | பெருந்தோட்டத்துறை சார்ந்த சிறுவர்கள் மற்றும் சமுதாயத்தினரின் பாதுகாப்பை உறுதி செய்யும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் | 17 – 17 |
| 19. | மீனவர் கிராமங்களில் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் நிகழ்ச்சித்திட்டம் | 17 – 18 |
| 20. | பாடசாலை ஊடக கழகம் தேசிய நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல் | 18 – 18 |
| 21. | இலத்திரனியல், அச்சு, சமூக ஊடகங்கள் மற்றும் பல்வேறு முறைகளின் மூலம் சிறுவர் பாதுகாப்பு பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 18 – 20 |
| 22. | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளம் | 20 – 21 |
| 23. | வெளித்தோற்றத்தில் இனங்காண முடியாத குறைபாடுகளைக் கொண்ட சிறுவர்களை இனங்காணல் புத்தகத்தை வடிவமைத்தல். | 21 – 21 |
| 24. | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ கீதத்தை வெளியிடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | 22 – 22 |
| 25. | சிறுவர் பாதுகாப்புக்காக புதிய ஊடகங்களைப் பயன்படுத்தல் | 22 – 22 |
| 26. | இணையத்தள கொடுப்பனவு மேடையை அறிமுகம் செய்தல் | 22 – 22 |
| 27. | உளவியல் சுகாதார மற்றும் உளவியல் சமூக உதவி வழங்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் | 22 – 22 |
| 28. | போதைவஸ்துக்களுக்கு அடிமையான தாய்மார் மற்றும் அதனால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு விஞ்ஞான ரீதியாக சிகிச்சையளிக்கும் வழிகாட்டல்களை தயார் செய்தல். | 22 – 23 |
| 29. | சிறுவர் துஷ்பிரயோக மீள்இணைத்தல் பாடவிதானத்தை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கு மொழிபெயர்ப்புச் செய்து தரப்படுத்தல். | 23 - 23 |
| 30. | சுனாமி பாதுகாவலர் பெற்றோர் அரவணைப்பு நிகழ்ச்சித்திட்டம் | |

| | | |
|---|---|---|
| 31. | சாதகமான ஒழுக்கக்கட்டுப்பாடு பற்றி பாடசாலை ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களை விழிப்புணர்வூட்டல் | 23 – 23 |
| 32. | ‘‘சித்சவிய’’ தேசிய சிறுவர் மைய உளவியல் சமூக உதவிச் சேவை | 24 – 24 |
| 33. | சிறுவர் துன்புறுத்தலுக்கு எதிரான தேசிய தினத்தைக் கொண்டாடுதல் | 24 – 24 |
| 34. | சிறுவர் ஊழியத்துக்கு எதிரான சர்வதேச தினத்தைக் கொண்டாடுதல். | 25 – 25 |
| 35. | உலக சிறுவர் தினத்தைக் கொண்டாடும் வைபவம் | 25 – 25 |
| 36. | உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 26 – 26 |
| 37. | சித்துவிலி சித்தம் - 2021 அகில இலங்கை சித்திரம், சுவரொட்டி மற்றும் கார்டூன் போட்டி | 26 – 28 |
| 38. | சர்வதேச சிறுமியர் தினத்தைக் கொண்டாடுதல் | 28 – 30 |
| 39. | சிறுவர் பாதுகாப்பு பற்றிய வீடியோ விளையாட்டு செயலியை வடிவமைப்பதை நிறைவு செய்தல் | 31 – 31 |
| 40. | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தவிசாளர் மற்றும் பிரதித் திவசாளர் வளவாளர்களாக பங்களிப்பு வழங்கியமை | 31 – 32 |
| 41. | இலங்கை சிறுவர் பாதுகாப்பு செயலி 1929 (1929 Sri Lanka Child Protection App) சிறுவர்கள் மற்றும் பொது மக்களுக்காக வெளியிடல். | 32 – 32 |
| 42. | செய்தி அறிவித்தல்களை வெளியிடல் | 32 – 34 |
| 43. | சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை ஒழுங்குறுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் | 34 – 34 |
| 44. | நாளாந்த பத்திரிகைகளை ஒழுங்குறுத்தல் | 34 – 35 |
| 45. | 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை | 35 – 35 |
| 46. | வீடியோ வாக்குமூலங்களை ஒளிப்பதிவு செய்தல் | 36 – 36 |
| 47. | புலனாய்வு மற்றும் சைபர் அவதானிப்பு நடவடிக்கைகள் | 36 – 38 |
| 48. | வைத்தியசாலையில் மேற்கொள்ளும் நிறுவனம்சார் சம்பவ மீளாய்வுக் கலந்துரையாடலை விளைதிறன்மிக்கவாறு மேற்கொள்ளல். | 38 - 38 |

| | | |
|---|---|---|
| 49. | சிறுவர் பாதுகாப்பு பற்றிய சிறுவர் ஆட்கடத்தை இனங்காணல், அறிக்கையிடல் மற்றும் விசாரணை செய்வதற்கான பயிற்சி பாடவிதானம், கற்றல் பணித் தொகுப்பு மற்றும் கருவிகள் வழிகாட்டல் தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அலுவலர்களை விழிப்புணர்வூட்டல். | 39 – 39 |
| 50. | சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக சிறுவர் ஆட்கடத்தலை இனங்காணல், அறிக்கையிடல் மற்றும் விசாரணை செய்வதற்கான பயிற்சி பாடவிதானம், கற்றல் பணித் தொகுப்பு மற்றும் கருவிகள்" வழிகாட்டல்கள் தொடர்பில் பொலிஸ் அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 39 – 39 |
| 51. | எச்.ஐ.வீ. மற்றும் பாலியல் நோய்கள் பற்றி இளம் பராயத்தைச் சேர்ந்த சிறுவர்களை விழிப்பூர்வூட்டும் கையேடு தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவலர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் | 39 – 40 |
| 52. | சிறுவர் பாதுகாப்பு தொடர்பான அறிவை இற்றைப்படுத்தல் மற்றும் அலுவலர்களின் திறன்களை வளர்த்தல் | 40 – 40 |
| 53. | சட்ட ரீதியான பணிகள் | 40 – 41 |
| 54. | 2021 ஆம் ஆண்டில் சட்ட ஆலோசனை வழங்கியமை. | 42 – 42 |
| 55. | 2005 இன் 16 ஆம் இலக்க சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்துக்கு அமைய வழக்குகளின் எண்ணிக்கை | 42 – 43 |
| 56. | 2021 ஆம் ஆண்டில் முறைப்பாடுகளை வழிப்படுத்தல் | 43 – 43 |
| 57. | சட்டரீதியான விடயங்களின் போது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையை பிரதிநிதித்துவம் செய்தல் | 43 – 43 |
| 58. | 2021 ஆம் ஆண்டில் நீதிமன்றங்களில் ஆஜரான சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | 43 – 44 |
| 59. | சிறுவர்கள் பற்றி ஊடகங்களில் அறிக்கையிடுவதன் சட்டபூர்வமான தன்மை பற்றிய கண்காணிப்பு | 44 – 44 |
| 60. | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சட்டரீதியான ஆவணங்களை தயார் செய்தல் | 44 – 44 |
| 61. | சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய குற்றவியல் வழக்கு விசாரணைகளை கண்காணிப்புச் செய்தல். | 44 – 45 |
| 62. | வெபினார்களில் பங்கேற்றல் (Webinar) | 45 – 45 |

| | | |
|---|---|---|
| 63. | வெபினார் ஒழுங்கு செய்தல் (Webinar) (சிங்களம் மற்றும் தமிழ் மொழி) | 46 – 46 |
| 64. | விரிவுரைகளுக்கான பங்களிப்பு | 46 – 46 |
| 65. | விசேட பொலிஸ் புலனாய்வுகள் | 46 – 46 |
| 66. | விசேட பொலிஸ் விசாரணை பிரிவுக்கு 1929 சிறுவர் உதவித் தொலைபேசி சேவை ஊடாக அல்லது வேறு முறைகளினால் அறிக்கையிடப்படும் முறைப்பாடுகள் | 46 – 46 |
| 67. | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பொலிஸ் பிரிவின் ஊடாக விசாரணை நடாத்தப்பட்டு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டு வழக்குத் தாக்கல் செய்தல் | 46 – 47 |
| 68. | விசேட பொலிஸ் விசாரணை பிரிவு சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யும் பணியை மேற்கொள்கின்றது. | 47 – 47 |
| 69. | விசேட பொலிஸ் விசாரணை பிரிவின் அலுவலர்கள் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகளில் ஆஜராகின்றார்கள். | 48 – 48 |
| 70. | வருடாந்த கணக்குகள் | 49 – 74 |
| 71. | கணக்காளர் நாயகத்தின் அறிக்கை | 75 - 83 |

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தவிசாளரின் மீளாய்வு

சிறுவர் துஷ்பிரயோங்களை தடுத்தல் மற்றும் அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளான சிறுவர்களை பாதுகாத்தல் மற்றும் அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான தேசிய கொள்கையை தயார் செய்வது தொடர்பான பணிகளுக்கு மற்றும் சகல வகையிலுமான சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கும் எதிரான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் ஒழுங்குறுத்துவதற்காக 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தாபிக்கப்பட்டது.

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14 ஆம் பிரிவுக்கு அமைய அதிகாரசபைக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதன் (அ) பிரிவுக்கு அமைய சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கையை தயார் செய்தல் வேண்டியுள்ளது. அதற்கமைய சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு 209.10.29 ஆம் திகதிய அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தது.

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்திற்கு இசைவாக 10 துறைகளை உள்ளடக்கும் வகையில் 10 அமைச்சுக்களுடன் கூட்டு அணுகுமுறையுடன் நடவடிக்கை மேற்கொண்டு, சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கையை அமுல்படுத்துவதற்கான ஐந்து வருட செயற்றிட்டத்தின் முதலாவது வரைவு 2021 ஆம் ஆண்டு தயார் செய்து முடிக்கப்பட்டது. அதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2020 ஆம் ஆண்டு சிறுவர் பாதுகாப்பு தொடர்பான சட்டரீதியான நடவடிக்கைமுறை மற்றும் வழிகாட்டல்களை தயார் செய்வது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டதுடன், அதற்கமைய நீதிமன்ற செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்டுள்ள சிறுவர்கள் முகம் கொடுக்கின்ற சிக்கல்களை தீர்த்துக் கொள்ளும் முறையியல்கள் பற்றிக் கலந்துரையாடி சிறுவர் தொடர்பில் காணப்படுகின்ற சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டிய ஐந்து துறைகள் இனங்காணப்பட்டன. மேற்படி ஐந்து துறைகளையும் அடிப்படையாகக் கொண்டு கல்விமான்கள் குழுக்கள் ஐந்து நியமனம் செய்யப்பட்டு சிறுவர் பாதுகாப்பு பற்றிய சட்டங்கள், நடவடிக்கைமுறைகள், வழிகாட்டல்களை தயார் செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் இதனுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் செயலமர்வுகள் நடாத்தப்பட்டு வரைவு செய்யப்பட்ட குறித்த ஆவணம் நீதி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுத்துக் கொள்வதற்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. மேலும் சிறுவர் துஷ்பிரயோகம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களை மீண்டும் சமூகமயப்படுத்தத் தேவையான தலையீடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் நிலவிய கொவிட் தொற்று நோய்க்கு மத்தியிலாயினும், மேற்படி சவாலை வென்றெடுப்பதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஒன்லையின் முறையின் ஊடாக நாட்டில் வாழும் சிறுவர்களின் பாதுகாப்புக்காக நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது.

2021 ஆம் ஆண்டு 10 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. பொதுவாக நோக்கும் போது 2021 ஆம் ஆண்டும் சிறுவர் பாதுகாப்புக்காக செயற்பட்டு வந்த சகல துறைகளிலும் குறிப்பிடத்தக்களவு செயலாற்றுகையை அடைந்துகொள்ள இயலுமானது என்பதைக் குறிப்பிட முடியும். இதற்கு பணிப்பாளர் சபை, நேர் வரிசை அமைச்சு மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பதவியணியினர் வழங்கிய ஒத்துழைப்பை மிக்க உயர்வாக மதிக்கின்றேன்.

உதயகுமார அமரசிங்க
தவிசாளர்
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

**அறிமுகம்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை இந்த ஆண்டில் சிறுவர்கள் தொடர்பில் அமுலில் உள்ள சட்டக் கட்டமைப்பு தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. நாட்டின் சிறுவர்களது உச்சளவான நலனுக்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை இந்த ஆண்டிலும் செயற்பட்டது.

1989 நவம்பர் மாதம் 20 ஆம் திகதி 'ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்' உலகப் பிரகடனமாக நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது. இந்த சமவாயம் 54 பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன், அதன் மூலம் உலகின் ஒவ்வொரு பிள்ளைக்கும் உரித்தாக வேண்டிய உரிமைகள் மற்றும் மேற்படி உரிமைகளை அமுல்படுத்துவதில் அரசுக்கு உரித்தான பொறுப்பும் விபரிக்கப்பட்டுள்ளது. சிறுவர் உரிமைகள் சமவாயத்தை நிறைவேற்றிக் கொண்ட பின்னர் மேற்படி காலப் பகுதியில் காணப்பட்ட சமூக நிலைமைகளை ஆராயும் போது, சிறுவர் ஆட்கடத்தல், சிறுவர் விபச்சாரத் தொழில், சிறுவர் ஆபாசத் திரைப்படங்கள் மற்றும் வெளியீடுகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளல் மற்றும் சர்வதேச ரீதியில் இரகசியமாக மேற்கொள்ளப்படுகின்ற சிறுவர் ஆட்கடத்தில் அதிகரிப்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்துவதும் மேற்கொள்ளப்பட்டது. மேலும் ஆயுத மோதல்களின் போது சிறுவர்களை பலாத்காரமாக யுத்ததில் ஈடுபடுத்தல் அல்லது ஆட்சேர்ப்புச் செய்து கொள்வதை சர்வதேச குற்றச் செயலாக கருதுவதும் இனங்காணப்பட்டது. இவ்வனைத்து விடயங்கள் தொடர்பிலும் தீவிர கவனம் செலுத்தி 2000 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் சமவாயத்திற்கு, சிறுவர்களை ஆயுதப் போராட்டங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதைத் தடுத்தல் மற்றும் சிறுவர் வியாபாரம், சிறுவர் விபச்சாரம் மற்றும் சிறுவர்களை ஆபாசத் திரைப்படங்கள் மற்றும் வெளியீடுகளுக்குப் பயன்படுத்துவதை தடுத்தல் ஆகிய உபவரைவுகள் உள்ளடக்கப்பட்டன.

இலங்கை அரசும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் சமவாயத்தில் 1990 ஆம் ஆண்டு கையொப்பமிட்டு தமது இணக்கப்பாட்டை தெரிவித்தது. 1991 யூலை மாதம் 12 ஆம் திகதி இது நிறைவேற்றப்பட்டது. அதற்கமைய, இலங்கையில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை சிபாரிசு செய்வது தொடர்பாக 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சிறுவர் பாதுகாப்பு பற்றிய சனாதிபதி செயலணி தாபிக்கப்பட்டது. இதன் போது விடயங்களை ஆராய்ந்த மேற்படி குழு சிறுவர் துஷ்பிரயோகங்களை குறைப்பதற்குத் தத்துவமளிக்கப்பட்ட அரச நிறுவனமொன்றின் தேவை தொடர்பிலான

சிபாரிசுகள் சமர்ப்பித்தது. அதற்கமைய 1998 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நீதி அமைச்சரினால் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. 1998 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இச்சட்டம் பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அதற்கமைய 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தாபிக்கப்பட்டது. 1990 யூன் மாதம் அதிகாரசபையின் தலைவர் மற்றும் நிருவாக சபை நியமனம் செய்யப்பட்டதை அடுத்து அதிகாரசபை இயங்க ஆரம்பித்தது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஆரம்பம் முதல் இன்று வரை சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுத்தல், சிறுவர் துஷ்பிரயோகங்களின் போது அது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீள்சமூகமயப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் அதிகாரங்களைப் பயன்படுத்தி நாட்டிலுள்ள சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், 2004 டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட சிறுவர்களின் அபிவிருத்திக்காக 2005 இன் 16 ஆம் இலக்க சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலமும் அதிகார சபைக்கு தத்துவமளிக்கப்பட்டுள்ளது. மேலும் 2005 இன் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறைகளைத் தடுக்கும் சட்டத்தின் மூலமும் ஒரு பிள்ளை குடும்ப வன்முறைக்கு ஆளாகும் பட்சத்தில் அதிகார சபைக்கு அறியக் கிடைக்கும் போது மூன்றாம் தரப்பினராக அதில் தலையிட முடியும்.

சிறுவர்களின் உச்சளவான நலனுக்காக செயற்படுவதற்கு சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களை துரிதமாக மற்றும் முறையாக அறிக்கையிடுவது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு 2010 யூலை 22 ஆம் திகதி ‘‘1929’’ இலங்கை சிறுவர் தொலைபேசி சேவையானது 24 மணிநேரமும் இயங்கும் வகையில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வளவில் தாபிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொலைபேசிச் சேவை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து சமூகத்தில் மறைந்திருந்த சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அறிக்கையிடப்படுவது படிப்படியாக அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிந்தது. இன்று இலங்கையின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அறிக்கையிடப்படுவதுடன், ஆலோசனைச் சேவைகளையும் இதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பிரதான பணியொன்றான ‘‘சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை’’க்கு 2019.10.29 ஆம் திகதிய அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இந்தத் தேசிய கொள்கையை அமுல்படுத்துவதற்கான குறித்த ஐந்து வருட திட்டமும் தயார் செய்து முடிக்கப்பட்டது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சிறுவர்களின் பாதுகாப்புக்காக 2021 ஆம் ஆண்டிலும் தேசிய செயற்றிட்டங்களுக்கு அமைய தமது பணிகளை மேற்கொண்டுள்ளது.

**பிரதான செயற்பணி**

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்திற்கு அமைய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு பரந்தளவிலான செயற்பணி பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. குறித்த செயற்பணி பின்வருமாறாகும். (14 ஆம் பிரிவுக்கு அமைய)

(அ) சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதும் அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகின்ற சிறுவர்களை பாதுகாப்பதும் அவர்களுக்கு சிகிச்சையளிப்பது தொடர்பான தேசிய கொள்கையொன்றை தயார்செய்வதற்கு அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதும்.

(ஆ) சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

(இ) அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளானவர்களை பாதுகாப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

(ஈ) துஷ்பிரயோகத்தில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு சிறுவர்களுக்கு உள்ள உரிமைகள் தொடர்பாகவும், சிறுவர் நெறிபிறழ்வைத் தடுப்பதற்கான முறைமை பற்றியும் அறிவுறுத்தல்.

(உ) சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்கின்ற பணிக்கும், அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாவதில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கும் அவர்களின் உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்கும், தேவையான சகல வகையிலுமான நடவடிக்கைகளை மேற்கொள்வதும், பொருத்தமான சந்தர்ப்பங்களில் அந்தப் பணிகளுக்கு உரிய அமைச்சுக்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், மாவட்ட, பிரதேச செயலாளர்களினதும் அரசாங்க, தனியார் துறையினரினதும், அமைப்புகளின் அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளல்.

(ஊ) சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கான தேசிய கொள்கையை பயன்மிக்கவாறு அமுல்படுத்துவதற்கு தேவையான சட்ட ரீதியான நிருவாக அல்லது வேறு திருத்தங்களை சிபாரிசு செய்தல்.

(எ) சகல வகையிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான சட்டங்களை அமுல்படுத்துவதை ஒழுங்குபடுத்தல்.

(ஏ) சிறுவர் துஷ்பிரயோகங்களுடன் சம்பந்தப்பட்ட அனைத்து புலனாய்வுகள் மற்றும் குற்றவியல் சட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றங்களை ஒழுங்குறுத்தல்.

(ஐ) ஆயுத மோதல்களின் அழுத்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் தொடர்பாக மனிதாபிமான அடிப்படையில் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை சிபாரிசு செய்வதும், அவர்களின் உடல்

மற்றும் உளவியல் நலன்புரிக்கு நடவடிக்கை எடுப்பதும் உட்பட அவ்வாறான சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களை சமூகத்தில் மீள இணைத்துக் கொள்வதும்.

(ஒ) குற்றங்கள் தொடர்பான புலனாய்வு மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டுள்ள சிறுவர்களின் பாதுகாப்புக்கும் அரவணைப்புக்கும் தேவையான சந்தர்ப்பங்களில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஓ) சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான மக்களின் முறைப்பாடுகளை பொறுப்பேற்றுக் கொள்வதும் தேவையான சந்தர்ப்பங்களில் அந்த முறைப்பாடுகளை உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பிப்பதும்.

(ஔ) சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக மேற்கொள்கின்ற கடுமையான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்வது தொடர்பாக மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், அரச சார்பற்ற அமைப்புகளுக்கு ஆலோசனை வழங்குவதும் உதவி வழங்குவதும்.

(க) சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான தேசிய தரவுக் கட்டமைப்பை தயார் செய்வதும், அதனை பேணிவருவதும்.

(ங) சம்பந்தப்பட்ட அமைச்சுகள், வேறு நிறுவனங்களின் ஆலோசனைகளைப் பெற்று சிறுவர்களுக்கு சிறுவர் பாதுகாப்புச் சேவைகளை ஆற்றுகின்ற சகல சமய மற்றும் மத சார்பான நிறுவனங்களை கண்காணிப்புச் செய்வதும் அது தொடர்பான ஒழுங்குறுத்தல்களும்.

(ச) சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் ஆராய்ச்சிகளை நடாத்துவதும், மேம்படுத்துவதும், ஒருங்கிணைப்புச் செய்வதும்.

(ஞ) சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் சிறுவர்களின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பாக மக்களுக்கு தகவல்களை பெற்றுக்கொடுப்பதும் கல்வியை பெற்றுக்கொடுப்பதும்.

(ட) சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதற்குள்ள வாய்ப்புக்களை குறைப்பதற்காக சுற்றுலாத்துறை நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து பிரிவுகளுடனும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்.

(ண) சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான செயலமர்வுகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்வதும் அதற்கான வசதிகளை செய்துகொடுப்பதும்.

(த) சகல வகையிலுமான சிறுவர் துஷ்பிரயோகங்களை வெளிப்படுத்திக் கொள்வதும், தடுப்பதும் அது தொடர்பாக வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் ஒருங்கிணைப்புகளைப் பேணி நடவடிக்கை மேற்கொள்வதும் தகவல்களை பரிமாற்றிக்கொள்வதும்

# 2021ஆண்டுக்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் நிறுவன ஒழுங்கமைப்பு



**2021 ஆம் ஆண்டில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஒழுங்கமைப்பு**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைமையகத்தில் பின்வரும் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

1. தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளர் அலுவலகம்
2. பணிப்பாளர் நாயகம் அலுவலகம்
3. நிருவாகம் மற்றும் மனித வளப் பிரிவு
4. நிதிப் பிரிவு
5. திட்டமிடல் மற்றும் தகவல் பிரிவு
    - 5.1 திட்டமிடல் மற்றும் ஒழுங்குறுத்தல் அலகு
    - 5.2 தகவல் மற்றும் ஊடக அலகு
        - 5.2.1 நூலகம்
6. நிகழ்ச்சித்திட்டங்கள் பிரிவு
7. உளவியல் சமூக பிரிவு
8. சட்டப் பிரிவு
9. சட்டத்தை அமுல்படுத்தும் பிரிவு
    - 9.1 1929 இலங்கை சிறுவர் தொலைபேசிச் சேவை
    - 9.2 மத்திய ஆவணக்காப்பகம்
    - 9.3 வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்யும் அலகு
    - 9.4 இணையத்தளக் கண்காணிப்பு அலகு
10. உள்ளகக் கணக்காய்வு பிரிவு
11. விசேட பொலிஸ் விசாரணை பிரிவு
12. மாவட்ட அதிகாரிகள் மற்றும் பிரதேச அதிகாரிகள் மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ளனர்.

**2021 ஆம் ஆண்டுக்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணி**

| இல. | பதவி | சம்பளக் குறியீடு | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | சேவையில் ஈடுபட்டுள்ள எண்ணிக்கை | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் | HM -2-1 | 01 | 01 | - |
| 02 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் | HM -1-3 | 01 | - | 01 |
| 03 | பணிப்பாளர் - நிருவாகம் மற்றும் மனித வளம் | HM -1-1 | 01 | 01 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 04 | பணிப்பாளர் - நிதி | HM -1-1 | 01 | - | 01 |
| 05 | பணிப்பாளர் - சட்டம் | HM -1-1 | 01 | 01 | - |
| 06 | உளவியல் சிகிச்சை நிபுணர் | HM -1-1 | 01 | 01 | - |
| 07 | பணிப்பாளர் - திட்டமிடல் மற்றும் தகவல் | HM -1-1 | 01 | 01 | - |
| 08 | பணிப்பாளர் - நிகழ்ச்சித்திட்டம் | HM -1-1 | 01 | 01 | - |
| 09 | பணிப்பாளர் - சட்டத்தை அமுல்படுத்தல் | HM -1-1 | 01 | 01 | - |
| 10 | உதவி பணிப்பாளர் - நிருவாகம் | MM -1-1 | 01 | 01 | - |
| 11 | உதவி பணிப்பாளர் - சட்டம் | MM -1-1 | 01 | - | 01 |
| 12 | உதவி பணிப்பாளர் - நிகழ்ச்சித்திட்டம் | MM -1-1 | 01 | 01 | - |
| 13 | உதவி பணிப்பாளர் - உளவியல் | MM -1-1 | 01 | 01 | - |
| 14 | உதவி பணிப்பாளர் - திட்டமிடல் மற்றும் தகவல் | MM -1-1 | 01 | 01 | - |
| 15 | உதவி பணிப்பாளர் - தகவல் மற்றும் ஊடகம் | MM -1-1 | 01 | 01 | - |
| 16 | உதவி பணிப்பாளர் - சட்டத்தை அமுல்படுத்தல் | MM -1-1 | 01 | 01 | - |
| 17 | கணக்காளர் | MM -1-1 | 01 | 01 | - |
| 18 | உள்ளக கணக்காய்வாளர் | MM -1-1 | 01 | 01 | - |
| 19 | பணிப்பாளர் சபை செயலாளர் | JM – 1-1 | 01 | 01 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 20 | நிருவாக அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 21 | நிகழ்ச்சித்திட்ட அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 22 | கணக்கு அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 23 | புலனாய்வு அலுவலர் | JM – 1-1 | 02 | 01 | 01 |
| 24 | தகவல் மற்றும் ஊடக அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 25 | திட்டமிடல் மற்றும் ஒழுங்குறுத்தல் அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 26 | ஆராய்ச்சி மற்றும் நலன்புரி அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 27 | வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்யும் அதிகாரி | JM – 1-1 | 01 | - | 01 |
| 28 | உளவியல் சமூக அதிகாரி | JM – 1-1 | 01 | - | 01 |
| 29 | தகவல் தொழிநுட்ப அதிகாரி | JM – 1-1 | 01 | - | 01 |
| 30 | சைபர் குற்ற பகுப்பாய்வாளர் | JM – 1-1 | 01 | - | 01 |
| 31 | சைபர் புலனாய்வு அதிகாரி | JM – 1-1 | 01 | - | 01 |
| 32 | சட்ட அமுலாக்க அதிகாரி | JM – 1-1 | 01 | - | 01 |
| 33 | மொழிபெயர்ப்பாளர் (ஆங்கிலம்) | MA - 4 | 01 | - | 01 |
| 34 | மொழிபெயர்ப்பாளர் (தமிழ்) | MA - 4 | 01 | - | 01 |
| 35 | மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர் | MA - 3 | 25 | 18 | 07 |
| 36 | மாவட்ட உளவியல் சமூக அலுவலர் | MA - 3 | 25 | 14 | 11 |
| 37 | பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர் | MA - 3 | 369 | 227 | 142 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 38 | பாதிக்கப்பட்ட குழந்தை பாதுகாப்பு அதிகாரி | MA - 3 | 01 | - | 01 |
| 39 | நிருவாக உதவியாளர் | MA - 3 | 01 | 01 | - |
| 40 | கணக்குகள் உதவியாளர் | MA - 3 | 03 | 02 | 01 |
| 41 | ஊடக உதவியாளர் | MA - 3 | 03 | 01 | 02 |
| 42 | நூலகர் | MA - 3 | 01 | - | 01 |
| 43 | திட்டமிடல் உதவியாளர் | MA - 3 | 01 | - | 01 |
| 44 | சட்ட உதவியாளர் | MA - 3 | 03 | 01 | 02 |
| 45 | புலனாய்வு உதவியாளர் | MA - 3 | 06 | - | 06 |
| 46 | ஆலோசனை உதவியாளர் | MA - 3 | 15 | 02 | 13 |
| 47 | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | MA - 3 | 03 | 01 | 02 |
| 48 | வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்யும் உதவியாளர் | MA - 3 | 10 | 01 | 09 |
| 49 | சைபர் பார்வை உதவியாளர் | MA - 3 | 02 | - | 02 |
| 50 | சிகிச்சையளிக்கும் மருத்துவர் | MA - 3 | 03 | 01 | 02 |
| 51 | வீடியோ தொழில்நுட்ப உதவியாளர் | MA – 2-1 | 10 | 01 | 09 |
| 52 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) | MA – 2-1 | 15 | 08 | 07 |
| 53 | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | MA – 2-1 | 02 | 01 | 01 |
| 54 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சாரா) | MA – 1-1 | 32 | 23 | 09 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 55 | முகாமைத்துவ உதவியாளர் (தட்டச்சு முறைமை – சிங்களம்) | MA – 1-1 | 10 | - | 10 |
| 56 | முகாமைத்துவ உதவியாளர் (தட்டச்சு முறைமை – தமிழ்) | MA – 1-1 | 10 | - | 10 |
| 57 | முகாமைத்துவ உதவியாளர் (ஒப்பு நோக்குனர் - சிங்களம்) | MA – 1-1 | 10 | - | 10 |
| 58 | முகாமைத்துவ உதவியாளர் (ஒப்பு நோக்குனர் - தமிழ்) | MA – 1-1 | 10 | - | 10 |
| 59 | சாரதி | PL-3 | 07 | 05 | 02 |
| 60 | செய்தி கொண்டுசெல்பவர் (தூதுவர்) | PL-1 | 01 | - | 01 |
| 61 | அலுவலக சிற்றூழியர் | PL-1 | 03 | 01 | 02 |
| 62 | அலுவலக தொழிலாளி | PL-1 | 02 | 01 | 01 |
| **மொத்தம்** | | | **618** | **332** | **286** |

*நிதி அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளது.

**முன்னேற்றமும், எதிர்கால நோக்கும்**

2.1 2021 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

2021 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையானது , 3 செயற்றிட்டங்களின் கீழ் இயங்கிவந்தது. அதற்காக பின்வருமாறு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கம் செய்யப்பட்டன.

1. தேசிய அபிவிருத்தி செயற்றிட்டம் (ரூ.மி. 40)
2. 1929 எனும் 24 மணி நேரமும் இயங்கிவருகின்ற சிறுவர் தொலைபேசிச் சேவைக்குரிய செயற்றிட்டம் (ரூபா மில்லியன் 11.500)
3. சிறுவர்களுக்கான சமூக பாதுகாப்புச் செயற்றிட்டம் (ரூ.மி. 10.300)

**சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கைக்குரிய ஐந்து வருட செயற்றிட்டத்தை தயார் செய்தல்.**

சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கையை அமுல்படுத்துவதற்கான ஐந்து வருட செயற்றிட்டத்தை தயார் செய்வது 2020 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்திற்கு அமைய துறைசார் 10 பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் 10 அமைச்சுக்களுடன் இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. இந்த ஐந்து வருட செயற்றிட்டத்தின் வரைவுக்கு 2021.07.29 ஆம் திகதி நடைபெற்ற 206 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இந்த செயற்றிட்டத்திற்கு சிபாரிசுகளைப் பெற்றுக் கொள்வதற்காக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, பாலர் பாடசாலை மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு மற்றும் நிதி அமைச்சின் தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**சிறுவர் பகல்நேர அரவணைப்பு நிலையங்களுக்கான தேசிய கொள்கையை தயார் செய்தல்.**

ஆரம்ப வரைவை தயார் செய்வது தொடர்பான இலக்கிய ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்குத் தேவையான அடிப்படை தயார் செய்யப்பட்டு இந்தக் கொள்கையின் இறுதி வரைவு நிறைவு செய்யப்பட்டுள்ளது. தொழில்நுட்பக் குழுவினால் முதலாவது வரைவு மீளாய்வு செய்யப்பட்டுள்ளது. இந்த இறுதி வரைவு சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் வழங்கியுள்ள பிரேரணைகளையும் உள்ளடக்கிய வரைவுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் 2021.12.16 ஆம் திகதி கிடைத்துள்ளதுடன், அமைச்சரவையின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது.

**இலங்கையின் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் தொடர்பான தேசிய வழிகாட்டல்கள் மற்றும் ஆகக் குறைந்த தரநியமங்களை தயார் செய்தல்**

இலங்கையினுள் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் தொடர்பான தேசிய வழிகாட்டல்களுக்கு பணிப்பாளர் சபை மற்றும் இராஜாங்க அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், நூல் மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனம் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளன. அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிபாரிசுக்கு அமைய வழிகாட்டல்கள் இற்றைப்படுத்தப்பட்டன. அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக மகளிர், சிறுபர் அபிவிருத்தி, பாலர் பாடசாலை மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**சிறுவர்களில் தாக்கம் செலுத்தும் சட்டங்களை திருத்தம் செய்தல்**

நீதிமன்றச் செயன்முறையுடன் சம்பந்தப்படுகின்ற சிறுவர்கள் முகம் கொடுக்கும் சிக்கல்களை தீர்த்து வைக்கும் முறையியல்கள் பற்றிய கலந்துரையாடலொன்று நீதி அமைச்சரினால் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பிரதிநிதிகளுடன் மேற்படி அமைச்சில் நடாத்தப்பட்டதுடன் மேற்படி கலந்துரையாடலுக்கு அமைய சிறுவர்கள் தொடர்பில்

காணப்படுகின்ற சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டிய 5 துறைகள் இனங்காணப்பட்டுள்ளன. அவையாவன,

1. சிறுவர்கள் தொடர்பாக பல்வேறு சட்டங்களிலும் சிறுவன் எனும் சொல்லுக்கு வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கணத்தில் வயது பலதரப்பட்டதாக உள்ளமை, பல்வேறு சட்டங்களிலும் சிறுவன் என்பதற்கான வரைவிலக்கணம் பலதரப்பட்டதாக உள்ளதனால் சிறுவன் என்பதன் வரைவிலக்கணத்தை சட்ட ரீதியாக பொதுவான இணக்கப்பாட்டை எய்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
2. சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளுக்கு சிறுவர்களுக்கு சாதகமான நீதிமன்ற முறையியலை அறிமுகம் செய்தல்.
3. சிறுவர்கள் தொடர்பிலான பொலிஸ் விசாரணை வழிகாட்டலை அறிமுகம் செய்தல்.
4. வீடியோ சாட்சியங்கள் தொட்பிலான நடவடிக்கைமுறையை அறிமுகம் செய்தல்.
5. நீதிபதிகளுக்கு சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் தவறாளிகளுக்கான தண்டனைக் கொள்கை மற்றும் தண்டனை வழிகாட்டலை தயார் செய்தல்.

05 விடயத்துறைகள் தொடர்பான துறைசார் நிபுணர்களைக் கொண்ட 5 துணைக்குழுக்கள் நியமனம் செய்யப்பட்டன.

குழு உறுப்பினர்களாக சட்டக் கல்வித்துறையின் தொழில்வல்லுனர்கள், தனியார் சட்டத் தொழில்வல்லுனர்கள், சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் அலுவலர்கள் மற்றும் விடயத்துறைசார் ஏனைய நிபுணர்கள், சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் 5 குழுக்கள், குழு ஒருங்கிணைப்பு மற்றும் இலகுபடுத்தும் நடவடிக்கைகள் சிறுவர் பாதுகாப்பு விடயத்தில் நடவடிக்கை மேற்கொள்ளும் அரசசார்பற்ற நிறுவனங்கள் 5 இடம் பொறுப்பளித்தல், விடயம் சம்பந்தமான சட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு ஆராய்ச்சி உதவியாளர்களாக கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்டப் பீடத்தின் இறுதி ஆண்டு மாணவர்கள் 25 பேரின் உதவியைப் பெற்றுக் கொள்ளல்.

சட்டக் குழுவினால் ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதியும், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பிரதித் தவிசாளருமான திருமதி சுஜாதா அழஹப்பெரும அவர்களினால் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டதுடன், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தவிசாளர் பேராசிரியர் திரு முதித விதானபத்திரண அவர்களின் தலைமையில் இயங்கிவந்தது.

5 நிபுணத்துவக் குழுக்களின் யோசனைக்கமைய பங்குதாரர்களின் செயலமர்வை நிறைவு செய்து நீதி அமைச்சிடம் இறுதி பிரேரணை மற்றும் வழிகாட்டல்கள் சமர்ப்பிக்கப்பட்டன. 2021 மார்ச் மாதம் 31 ஆம் திகதி சிபாரிசுகளின் வரைவு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தவிசாளர் மற்றும் பிரதிதித் தவிசாளரினால் நீதி அமைச்சிடம் கையளிக்கப்பட்டது.



**மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை தொழில்நுட்ப வட்டங்களாக இயங்கச் செய்தல்.**

சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக தேசிய கொள்கை தொடர்பான செயற்பாட்டுப் பொறிமுறையை அமுல்படுத்தும் செயல்முறை சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள் பற்றிய பொறிமுறை தயார் செய்யப்பட்டு பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**அச்சுறுத்தலான சிறுவர்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் காரணிகளை வரைபடமாக்கல்**

மேலுள்ள பணியை மேற்கொள்வதற்கு முன்னர் அதன் முதலாவது முன்னோடி நிகழ்ச்சித்திட்டம் களுத்துறை மாவட்டத்தின் பேருவளை பிரதேச செயலாளர் பிரிவை மையமாகக் கொண்டு அமுல்படுத்தப்பட்டது. அதற்கமைய அச்சுறுத்தலான நிலையிலுள்ள சிறுவர்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான காரணிகளை இனங்காண்பதற்கு தகவல்களை சேகரிப்பதற்கு இணையத்தள ஒன்லையின் கேள்விக் கொத்து தயார் செய்யப்பட்டதுடன், மேற்படி கேள்விக் கொத்து மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் திட்டம் பற்றி பேருவளை பிரதேச செயலாளர் பிரிவின் சிறுவர் பாதுகாப்பு அலுவலர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

**சிறுவர் பாதுகாப்பு பற்றி அரசியல்வாதிகளை விழிப்புணர்வூட்டல்**

சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக அரசியல்வாதிகளை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு மாகாண மட்டத்தில் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவது பற்றிய எண்ணக்கருப் பத்திரம் தயார் செய்யப்பட்டுள்ளதுடன், இது மாவட்ட அலுவலர்களுடன் கலந்துரையாடலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**அச்சுறுத்தலான நிலையிலுள்ள சிறுவர்களுக்கு கல்வி உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்**

இதன் கீழ் எமது அதிகாரசபைக்கு முறைப்பாட்டு இலக்கத்துடன் அறிக்கையிடப்படுகின்ற முறைப்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பாதிக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட, பாதுகாப்பற்ற, அச்சுறுத்தலான மற்றும் கண்ணுக்கு புலப்படாத சிறுவர்களுக்கு கல்வி உதவி வழங்கப்படுகின்றது. 2021 ஆம் ஆண்டில் மேற்படி முறைப்பாடுகளின் விசாரணைகளின் போது

எமது அதிகாரசபையின் மாவட்ட, பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர்களினால் இனங்காணப்பட்ட கல்வி உதவி தேவையான 25 மாவட்டங்களையும் உள்ளடக்கிய சிறுவர்கள் 1356 பேருக்கு மேற்படி உதவிகள் வழங்கப்பட்டன.

**அனர்த்த / அவசர நிலைமைகளின் போது சிறுவர் பாதுகாப்பை உறுதி செய்யும் நிகழ்ச்சித்திட்டம்**

நாட்டில் அனர்த்த / அவசர நிலைமைகளின் போது சிறுவர் பாதுகாப்பு மற்றும் நல்ல நிலைத்திருத்தலை உறுதி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு மாவட்ட மட்டத்தில் வளங்களின் ஒதுக்கத்தைப் பேணிவரத் தேவையான ஏற்பாடுகள் சகல மாவட்ட செயலகங்களுக்கும் அனுப்பப்பட்டன. மாவட்ட மற்றும் பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர்களினால் மேற்படி வளங்களின் ஒதுக்கம் பயன்படுத்தப்பட்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

**மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் சிறுவர் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் சிறுவர் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிரேரணைகளைக் கோருவதற்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும், பிரதேச செயலகத்திற்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டன. மாவட்ட மற்றும் பிரதேச ரீதியாக கிடைத்துள்ள பிரேரணைகள் தொடர்பில் மதிப்பீடு செய்வதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவலர்களை உள்ளடக்கிய உள்ளகக் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டது. மேற்படி குழுவின் சிபாரிசுக்கு அமைய மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு நிதி வழங்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் மாவட்ட மற்றும் பிரதேச ரீதியாக சிறுவர் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் 257 மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டன.

**சுகாதார தொழில்வல்லுனர்கள் மற்றும் பதவியணியை விழிப்புணர்வூட்டும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

சிறுவர்களுக்கு இடம்பெறுகின்ற துஷ்பிரயோகங்கள் தொடர்பில் மற்றும் அவற்றைத் தடுத்துக் கொள்வது தொடர்பில் பல்வேறு தலையீடுகளை மேற்கொள்ளும் போது மருத்துவர்கள் பெரும் செயற்பணியை ஆற்றிவருகின்றார்கள். மேற்படி செயற்பணியை மென்மேலும் வலுவூட்டுவதற்காக மருத்துவர்களின் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை மேம்படுத்துவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் கொழும்பு பல்கலைக் கழகத்தின் பட்டப் பின் மருத்துவ நிறுவகத்துடன் இணைந்து சிறுவர் பாதுகாப்பு பற்றிய பட்டப் பின் மருத்துவ நிறுவகத்தில் கல்வி பயிலும் மருத்துவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்று 2021 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டது. இந்த ஆண்டில் ஒன்லையின் முறையில் 02 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், அதன் மூலம் விழிப்புணர்வூட்டப்பட்ட மொத்தப் பயனாளிகளான மருத்துவர்களின் எண்ணிக்கை 48 பேர் ஆவார்கள்.

**பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை அமுல்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை அமுல்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 'சமுதிகே கத்தாவ' மற்றும் 'ஓயா தென் லொக்கு லமயெக்' எனும் குறுந்திரைப்படங்கள் இரண்டு தமிழ் மற்றும் ஆங்கில் உபதலைப்பிடலுடன் தயார் செய்து முடிக்கப்பட்டன. இத்திரைப்படங்கள் மூலம் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், பாடசாலை சமுதாயத்தினர் மற்றும் பெரியவர்கள் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் விழிப்புணர்வூட்டப்படுகின்றார்கள். மேலும் விழிப்புணர்வூட்டலுக்கான கருவிகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள் தொடர்பாக பாடசாலைகளுக்கு தொலைபேசி அழைப்புக்களை விடுத்து ஒருங்கிணைப்பைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டமும் அமுல்படுத்தப்படுகின்றது. அதற்கமைய, பின்வருமாறு பாடசாலைகளுக்கு தொலைபேசி அழைப்புக்கள் விடுக்கப்பட்டுள்ளன.

| தொடர் இல. | மாவட்டம் | தொலைபேசி அழைப்பு விடுக்கப்பட்டு ஒருங்கிணைப்பு கட்டியெழுப்பப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை | மாவட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | கேகாலை | 133 | 529 |
| 02 | மொனராகலை | 120 | 293 |
| 03 | இரத்தினபுரி | 11 | 600 |
| 04 | பதுளை | 54 | 606 |
| மொத்தம் | | 318 | 2,019 |



சமுதகே கத்தாவ



ஓயா தென் லொக்கு லமயெக

## பெருந்தோட்டத்துறை சார்ந்த சிறுவர்கள் மற்றும் சமுதாயத்தினரின் பாதுகாப்பை உறுதி செய்யும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்

பெருந்தோட்டத்துறை சார்ந்ததாக வாழும் குடும்பங்களை சிறுவர்களுக்குப் பாதுகாப்பான குடும்பங்களாக மாற்றியமைத்து, அங்கு வாழும் சிறுவர்கள் சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களிலிருந்தும் பாதுகாக்கப்பட்டு மகிழ்ச்சியுடன் வாழ்பவர்களை அவர்களை மாற்றியமைக்க மற்றும் சிறுவர் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்களை தோட்டத்தைதுறை சார்ந்ததாக ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு 2021 ஆம் ஆண்டு குருநாகல், கண்டி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. குருநாகல் மாவட்டத்தின் மல்லவபிட்டிய மற்றும் பொல்கஹவல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவில் மொனரதென்ன தோட்டம் மற்றும் ஈதெல்ல தோட்டத்தை மையமாகக் கொண்டு வாழும் சிறுவர்களுக்கான உளவியல் சமூக செயற்பாடுகளை உள்ளடக்கிய 02 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இதன் மூலம் பயனடைந்த சிறுவர்களின் எண்ணிக்கை 74 பேர் ஆகும். மேலும் கண்டி மாவட்டத்தில் கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் ஹந்தான தோட்டத்தை மையமாகக் கொண்டு வாழும் சிறுவர்களுக்கான உளவியல் சமூக செயற்பாடுகளை உள்ளடக்கிய ஒரு நிகழச்ச்சித்திட்டம் 2021 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்டதுடன், அதன் மூலம் பயனடைந்த சிறுவர்களின் எண்ணிக்கை 41 பேர் ஆகும். மேலும் மாத்தளை மாவட்டத்தின் தோட்டங்களை மையமாகக் கொண்டு கடமையாற்றி வருகின்ற அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் அலுவலர்கள் 22 பேருக்காக ஒன்லையின் முறையில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்றும் நடாத்தப்பட்டது.

### மீனவர் கிராமங்களில் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் நிகழ்ச்சித்திட்டம்

மீனவர் கிராமங்களை மையமாகக் கொண்டு வாழும் குடும்பங்களை சிறுவர்களுக்கு பாதுகாப்பான குடும்பங்களாக மாற்றியமைத்து,, அங்கு வாழும் சிறுவர்கள் தொடர்பில் அச்சுறுத்தலான நிலைமைகள் மற்றும் சவால்களை இனங்கண்டு சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களிலிருந்தும் பாதுகாத்து மகிழ்ச்சிகரமாக வாழ்பவர்களாக மாற்றுதல் மற்றும் சிறுவர் பாதுகாப்புச் செயன்முறையில் முனைப்புடன் ஈடுபடுகின்ற உணர்வுப்பூர்வமான அலுவலர்களை மீனவர் கிராமங்களை மையமாகக் கொண்டு உருவாக்குவதற்கு 2021 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டமாகும். இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக 2021 ஆம் ஆண்டு காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, கொழும்பு, களுத்துறை, அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் மீனவர் கிராமங்களை சார்ந்ததாக கடமையாற்றும் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் அலுவலர்கள், மீனவர் சமுதாயத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் 95 அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் விழிப்புணர்வூட்டப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 3383 பேர் ஆவார்கள். மேலும் 2021 ஆம் ஆண்டில் மீனவர் கிராமங்களை மையமாகக் கொண்டு வாழும்

சிறுவர்களுக்கான உளவியல் சமூக செயற்பாடுகளை உள்ளடக்கிய 25 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், பயனாளிகளின் எண்ணிக்கை 992 பேர் ஆவார்கள்.

**பாடசாலை ஊடக கழகம் தேசிய நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்**

பாடசாலை ஊடக கழகங்களின் மூலம் பாடசாலை சிறுவர்கள் சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களிலிருந்தும் பாதுகாப்பது தொடர்பாக சிறுவர் பங்கேட்பை உறுதி செய்வது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. ஊடகப் பயன்பாட்டை பாடசாலைகளில் மேற்கொள்வது எவ்வாறு? விளைதிறன்மிக்க தொடர்பாடல் சிறுவர் பாதுகாப்பில் மேற்கொள்ளும் தாக்கம், சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் செயற்பணி, பாடசாலைகளில் சிறுவர் பாதுகாப்பை உறுதி செய்யும் போது ஊடகத்தின் பயன்பாடு ஆகிய விடயங்கள் பற்றி இங்கு கலந்துரையாடப்படுகின்றது. 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் இது மேற்கொண்டு முடிக்கப்பட்டது.





**இலத்திரனியல், அச்சு, சமூக ஊடகங்கள் மற்றும் பல்வேறு முறைகளின் மூலம் சிறுவர் பாதுகாப்பு பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்**

இலங்கையில் சிறுவர் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான தகவல்களை ஊடகத்துறை நிறுவனங்கள், பல்வேறு ஆட்கள் மற்றும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்து சமுதாயத்தினருக்குக் கொண்டு செல்வதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. அதற்காக இலத்திரனியல், அச்சு, சமூக ஊடகங்கள் மற்றும் பல்வேறு முறைகளின் மூலம் சிறுவர்கள், பெரியவர்களை சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் சிறுவர் பாதுகாப்பை ஒழுங்கு செய்துகொள்ளக்கூடிய முறை மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய ஆட்கள், அலுவலர்கள் மற்றும் நிறுவனங்களை விழிப்புணர்வூட்டுவதற்காக பின்வரும் சுவரொட்டி வடிவமைக்கப்பட்டது. சிறுவர்களை துஷ்பிரயோகங்களிலிருந்து விடுவித்துக் கொள்ளும் நோக்கத்துடன் இது வடிவமைக்கப்பட்டது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் செய்தியாகும்.




கொரோனா தொற்று கடுமையாக நாட்டில் பரவியிருந்ததன் காரணமாக தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் மற்றும் மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடை விதிக்கப்பட்டதன் காரணமாக சூம் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கொவிட் தொற்றுக் காலத்தில் சிறுவர் துஷ்பிரயோகங்களை குறைப்பதற்கான முயற்சியாக பெற்றோர் மற்றும் சிறுவர்களுக்கு தனித்தனியாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து பெற்றோர் மற்றும் சிறுவர்களுக்கான 02 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமங்களில் வாழும் சிறுவர்கள், பெற்றோர், அலுவலர்கள் மற்றும் எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமங்களுக்கு அயலில் உள்ள கிராமங்களின் சிறுவர்களுக்கு 02 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. சாரணர்கள் மற்றும் சாரணர்களை பயிற்றுவிப்பவர்களுக்காக 01 நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

சமூக ஊடகங்களின் மூலம் யூரியுப், பேஸ்புக் மற்றும் ரிவிட்டர் ஆகிய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ கணக்குகளின் ஊடாக சிறுவர் பாதுகாப்பு பற்றிய அறிவு, சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் பெரியவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதும் மேற்கொள்ளப்பட்டது.









இன்று சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்துள்ளமை மற்றும் ஊடகங்களில் காணப்படுகின்ற சமூகத்திற்கு ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தின் அடிப்படையில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான அறிவை சமூகமயப்படுத்துவதற்கு ஊடக நிறுவனங்களின் கோரிக்கைக்கு அமைய சிரச, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரங்கிரி ஸ்ரீலங்கா, இலங்கை தேசிய தொலைக்காட்சி, தெரண, ரீஎன்எல் மற்றும் சியத ஆகிய இலத்திரனியல் ஊடக நிறுவனங்களுக்கு மற்றும் லங்காதீப, திவயின, டேலி நியுஸ் மற்றும் டேலி மிரர் ஆகிய அச்சு ஊடகங்கள் மூலமும் சமூகத்தை விழிப்புணர்வூட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவலர்கள் வளவாளர்களாக வளப்பங்களிப்பை வழங்கியுள்ளார்கள்.







**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளம்**

இன்று சகல சமூகப் பிரிவினரும் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்தல் மற்றும் அதனூடாக தகவல்களை சேகரிப்பதை பரவலாகக் காணக்கூடியதாக உள்ளது. மேற்படி சமூகத் தேவையைப் புரிந்துகொண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை புதிய

இணையத்தளத்தை கையடக்கத் தொலைபேசி மூலம் பார்வையிடக்கூடியவாறு, வடிவமைக்கும் பணிகளை AFFNO Pvt Ltd நிறுவனத்தின் சமூக அனுசரணை நடவடிக்கையாக மேற்கொண்டு முடித்துள்ளது.




**வெளித்தோற்றத்தில் இனங்காண முடியாத குறைபாடுகளைக் கொண்ட சிறுவர்களை இனங்காணல் புத்தகத்தை வடிவமைத்தல்.**

இந்நாட்டில் வெளித்தோற்றத்தில் இனங்காண முடியாத குறைபாடுகள் காரணமாக சாதாரண பிள்ளைகளாக கருதி நடவடிக்கை மேற்கொள்ளும் போது ஏற்படுகின்ற அசௌகரியங்கள், அநீதிகள் மற்றும் சட்ட ரீதியான சிக்கல்களைக் குறைத்துக் கொள்வதில் இலங்கையில் குறைபாடுகளைக் கொண்ட சகல சிறுவர்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பதில் ஈடுபட்டுள்ள குற்றவியல் நீதிக் கட்டமைப்பின் அலுவலர்களுக்கு, சிறுவர் பாதுகாப்பு அலுவலர்களுக்கு மற்றும் சிறுவர்களுக்காக நடவடிக்கை மேற்கொள்ளும் சகல அலுவலர்களுக்காகவும் இந்த புத்தகம் வடிவமைக்கப்பட்டு முடிக்கப்பட்டது. இது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வடிவமைக்கப்பட்டது.









**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ கீதத்தை வெளியிடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு உத்தியோகபூர்வ கீதமொன்று வடிவமைக்கப்பட்டது. இதனை தேசபந்து திரு அமில மொரேமட இயற்றியுள்ளார். இசையமைப்பு திரு திலின ருகனகே, பாடல் செல்வி ஆதித்யா வெலிவத்த என்ற வகையில் பங்களிப்பு வழங்கப்பட்டது.

**சிறுவர் பாதுகாப்புக்காக புதிய ஊடகங்களைப் பயன்படுத்தல்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தகவல் மற்றும் ஊடகப் பிரிவினால் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக தகவல்கள் சிறுவர்கள், பொது மக்கள், தொழில்வல்லுனர்கள் மற்றும் ஆராய்ச்சிகளில் ஈடுபடுவோருக்குப் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ பேஸ்புக் (FaceBook), யூரியுப் (YouTube) மற்றும் ரிவிட்டர் கணக்குகளை இற்றைப்படுத்துவது மேற்கொள்ளப்பட்டது.

**இணையத்தள கொடுப்பனவு மேடையை அறிமுகம் செய்தல்**

இதுவரை அதிகாரசபையின் இணையத்தளம் ஊடாக இணையத்தள கொடுப்பனவு மேடையொன்று உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன்,இலங்கை வங்கியின் உதவியுடன் இந்த வசதி புதிய இணையத்தளத்தில் உட்புகுத்தப்பட்டது. இதன் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சிறுவர் நிதியத்திற்கு உதவி வழங்கும் சகலரும் இதனூடாக நிதிப் பங்களிப்பைப் பெற்றுக் கொடுக்க துரித ஆற்றல் கிடைக்கின்றது.

**உளவியல் சுகாதார மற்றும் உளவியல் சமூக உதவி வழங்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்வதற்காக வருகை தருகின்ற சிறுவர்களுக்கு, உளவியல் சமூக உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு, ஆலோசனை பெற வருகை தருகின்ற சிறுவர்களுக்கு உளவியல் சமூக உதவிகளைப் பெற்றுக் கொள்வறத்கு தேசிய சிறுவர் அதிகாரசபைக்கு வருகை தருகின்ற சிறுவர்களுக்கு, மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் மட்டத்தில் இனங்காணப்பட்டுள்ள தேவைகளின் அடிப்படையில் மேற்கொள்ளும் விசேட கோரிக்கைகள் தொடர்பில் சிறுவர் உளவியல் சமூக உதவிகளைப் பெற்றுக் கொடுப்பது இக்கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய, இந்த ஆண்டில் சிறுவர்கள் 164 பேருக்கு உளவியல் சமூக உதவிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

**போதைவஸ்துக்களுக்கு அடிமையான தாய்மார் மற்றும் அதனால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு விஞ்ஞான ரீதியாக சிகிச்சையளிக்கும் வழிகாட்டல்களை தயார் செய்தல்.**

போதைவஸ்துக்களைப் பயன்படுத்தும் கர்ப்பிணித் தாய்மார் மற்றும் அதனால் பாதிக்கப்பட்டுள்ள சிசுக்களுக்கு விஞ்ஞான ரீதியான சான்றுகளின் அடிப்படையிலான தலையீடுகளை மேற்கொள்வதற்கான தேசிய வழிகாட்டலை தயார் செய்வதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மே மாதம் கிடைத்துள்ளது. இதற்கு துணைக்குழுவும் நியமனம்

செய்துகொள்ளப்பட்டது. இந்தத் துணைக் குழு பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளதுடன், சாய்சாலை வழிகாட்டல்கள் மற்றும் பின்னாய்வு ஒழுங்குறுத்தல் வழிகாட்டல் தொகுப்புப் பகுதிகளை நிறைவு செய்துள்ளது. மேலும் வைத்தியசாலை மட்டத்தில் மேற்கொள்ளும் சம்பவ கருத்தரங்குகளின் போது மேற்கொள்ளும் தீர்மானங்களின் ஒருமைப்பாட்டை அடைந்துகொள்வதற்காக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடத் திட்டமிடப்பட்டது.

**சிறுவர் துஷ்பிரயோக மீள்இணைத்தல் பாடவிதானத்தை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கு மொழிபெயர்ப்புச் செய்து தரப்படுத்தல்.**

துஷ்பிரயோகத்திற்கு ஆளான சிறுவர்கள், தமது துஷ்பிரயோக அனுபவத்தின் அடிப்படையில் பல்வேறு சிக்கலான நிலைமைகளுக்கு முகம் கொடுப்பதை உலகின் பல்வேறு நாடுகளிலும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதன் முக்கிய அம்சமாக இருப்பது வளர்ச்சியடைந்த நாடுகளில் இவ்வாறான பிள்ளைகளின் சிக்கல்கள் வெற்றிகரமான முறையில் முகாமைத்துவம் செய்யப்பட்டு, பிள்ளை மீண்டும் மீள்இணைக்கப்படுவதன் மூலம் அப்பிள்ளையின் பிந்திய கால சிக்கல்களை வெற்றிகரமாக தீர்த்துவைப்பதாகும். இதன் மூலம் நோக்கமாகக் கொள்ளப்படுவது பிள்ளை மீண்டும் துஷ்பிரயோகத்திற்கு ஆளாவதை தடுத்தல் மற்றும் பிள்ளை ஊடாக எதிர்காலத்தில் வேறொரு பிள்ளை அல்லது ஆளொருவருக்கு ஏற்படக்கூடிய துஷ்பிரயோகத்தை தடுப்பதாகும். மேலும், பிள்ளைக்கு குற்றவியல் நியாயத்தை நிலைநாட்டும் செயன்முறையில் மீண்டும் பாதிக்கப்படுவதை தடுத்து, முறையாக அவரின் சாட்சியங்களைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பளித்து, பிள்ளைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பிள்ளையின் சேவைகளை மதிப்பீடு செய்வதை மேம்படுத்தி அதில் பங்கேட்கச் செய்வதும் நோக்கமாகக் கொள்ளப்படுகின்றது. பல நாடுகளில் பயன்படுத்தப்படுகின்ற மீள்இணைத்தல் பாடவிதானத்தை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கு மொழிபெயர்ப்புச் செய்வது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மொழிபெயர்ப்பு நடவடிக்கைகளை அடுத்து நிபுணர் குழுவொன்றின் மூலம் மென்மேலும் தரப்படுத்துவது மேற்கொள்ளப்படும்.

**சுனாமி பாதுகாவலர் பெற்றோர் அரவணைப்பு நிகழ்ச்சித்திட்டம்**

2004 ஆம் ஆண்டு முழு நாட்டையும் பாதித்த சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரிக்காக நடவடிக்கை மேற்கொள்வதற்கு 2005 இன் 16 ஆம் இலக்க சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் ஆக்கப்பட்டது. அதற்கமைய பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் கீழ் இச்சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரிக்காக 2021 ஆம் ஆண்டில் மாவட்ட சுனாமி பெற்றோர் பாதுகாவலர் அரவைணப்பு மதிப்பீட்டுக் குழுக்கள் 03 நடாத்தப்பட்டன. இந்த ஆண்டில் சிறுவர்கள் 41 பேருக்கு மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரவணைப்பு வழங்கப்பட்டுள்ளது. கல்வி உதவியாக 25 பேருக்கு மாதாந்தம் ரூபா 122,000.00 ஆன தொகை வழங்கப்பட்டது.

**சாதகமான ஒழுக்கக்கட்டுப்பாடு பற்றி பாடசாலை ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களை விழிப்புணர்வூட்டல்**

இந்த நிகழ்ச்சித்திட்டம் சமூக பாதுகாப்பு செயற்றிட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், இதனூடாக கல்வி அமைச்சையும் ஒருங்கிணைப்புச் செய்து சாதகமான ஒழுக்கக் கட்டுப்பாடு பற்றி ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளார்கள். இதற்கமைய 2021 ஆம் ஆண்டு உஹன, மெததும்பர மற்றும் பெலிஅத்த பிரதேச செயலாளர் பிரிவுகளில் இந்த நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

**"சித்சவிய" தேசிய சிறுவர் மைய உளவியல் சமூக உதவிச் சேவை**

கொவிட் 19 தொற்று நோய்க் காலப்பகுதியில் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் பல மூடப்பட்டிருந்த நிலையில் நாட்டின் சிறுவர்களின் உச்சளவான நலனுக்கான புதிய முறையியலாக தொலை உளவியல் சமூக உதவிச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கௌரவ தவிசாளர், பேராசிரியர் திரு முதித விதானபதிரண அவர்களின் எண்ணக்கருவுக்கு அமைய சித் சவிய தேசிய சிறுவர் மைய தொலை உளவியல் சமூக உதவிச் சேவை அறிமுகம் செய்யப்பட்டது.

இதன் போது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிபாரசபையின் உளவியல் சமூகப் பிரிவு பிரதான நடவடிக்கைப் பிரிவு என்ற வகையில் இயங்கிவருவதுடன், அதற்குச் சமாந்தரமாக முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் மாவட்ட உளவியல் சமூக அலுவலர்கள், மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர்களை சம்பந்தப்படுத்திக் கொண்டு சேவை வழங்கும் வலையமைப்பு தாபிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி தரவு முறைமையில் சமூக சேவைகள் திணைக்களத்தின் பிரதேச ரீதியான அலுவலர்கள் பற்றிய தரவுகள், மகளிர் பணியகத்தின் பிரதேச ரீதியான அலுவலர்கள் பற்றிய தரவுகள் மற்றும் வைத்தியசாலைகளில் தாபிக்கப்பட்டுள்ள மித்துறு பியச மற்றும் உளவியல் மருத்துவ நிபுணர் பிரிவுகள் பற்றிய தரவுகள் உட்புகுத்தப்பட்டுள்ளன. மேலும், தற்போது கல்வி அமைச்சுடன் இணைந்து பாடசாலை ஆலோசனை ஆசிரியர்கள் பற்றிய தரவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், சிறுவர்கள், பெற்றோர் பிரிந்து வாழும் குடும்பங்களை ஒன்றிணைத்தல், பொருளாதார அசௌகரியங்களைக் கொண்ட குடும்பங்களை அரசு, தொண்டர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் அமுல்படுத்தியுள்ள நிவாரண சேவைகளுடன் தொடர்புபடுத்தல், மனஅழுத்தம் உட்பட ஏனைய உளவியல் சிக்கல்களுக்கு ஆலோசனை சேவைகளை வழங்குதல், மருத்துவ சிகிச்சைக்குத் தேவையான சேவை பெறுநர்களை உரிய மருத்துவப் பிரிவுகளிடம் சமர்ப்பித்தல் போன்ற பல துறைகளின் ஊடாக உதவிச் சேவைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக சூம் மற்றும் மைக்ரோ சொப்ட் ரீம் வசதிகள் ஊடாக அலுவலர்களினால் இந்த உளவியல் சிக்கல்கள் தொடர்பில் தலையீடு செய்யப்பட்டது.'

**சிறுவர் துன்புறுத்தலுக்கு எதிரான தேசிய தினத்தைக் கொண்டாடுதல்**

சிறுவர் துன்புறுத்தலுக்கு எதிரான தேசிய தினமான 2021 சனவரி 04 ஆம் திகதி 1929 சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவையை பிரச்சாரம் செய்வதற்காக மோட்டார் வாகனங்களில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 1929 சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை பற்றிய விபரங்களை உள்ளடக்கிய ஸ்ரிக்கர் பிரச்சார நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.






**சிறுவர் ஊழியத்துக்கு எதிரான சர்வதேச தினத்தைக் கொண்டாடுதல்.**

சிறுவர் ஊழியத்துக்கு எதிரான சர்வதேச தினமான 2021 யூன் மாதம் 12 ஆம் திகதியன்று, இத்தினத்தை முன்னிட்டு,

- சிறுவர் ஊழியத்துக்கு எதிரான சர்வதேச தினம் தொடர்பாக **Info graphics FB, Twitter** சமூக வலைத்தளத்தில் வெளியிடப்பட்டமை.
- சிறுவர் ஊழியம் பற்றி விழிப்புணர்வூட்டும் வீடியோ தொகுப்பு **YouTube , FB, Twitter** சமூக வலைத்தளத்தில் வெளியிடப்பட்டமை.
- ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டமை.



**உலக சிறுவர் தினத்தைக் கொண்டாடும் வைபவம்**

சகலவற்றுக்கும் முன்னர் பிள்ளைகள் எனும் தொணிப்பொருளின் கீழ் அமைச்சினால் சிபாரிசு செய்யப்பட்ட திகதியான அக்டோபர் மாதம் 05 ஆம் திகதி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கேட்போர் கூடத்தில் இராஜாங்க அமைச்சர் திரு பியல் நிஷாந்த டி சில்வா அவர்களின் தலைமையில், இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி கே.எம்.எஸ்.டி. ஜயசேகர உள்ளிட்ட அலுவலர்கள் மற்றும் அதிகாரசபையின் தற்போதைய தவிசாளர் பேராசிரியர் திரு முதித விதானபதிரண உள்ளிட்ட பதவியணியினரின் பங்கேட்புடன் நடாத்தப்பட்டது.

உலக சிறுவர் தினம் (2021.10.01) 2021.10.05 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. இதன் போது புதிய இணையத்தளத்தை ஆரம்பித்துவைத்தல், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ கீதம் மற்றும் வெளித்தோற்றத்தில் இனங்காண முடியாத நோய்களைக் கொண்டுள்ள சிறுவர்களை இனங்காணல் எனும் நூலை மும்மொழிகளிலும் வெளியிட்டு வைத்தமையும் இடம்பெற்றது.

**உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்**

2021 அக்டோபர் மாதம் உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நல்ல குடும்பம் - மகிழ்ச்சிகரமான சிறுவர் உலகம் எனும் தொணிப்பொருளின் கீழ் ஒன்லையின் முறை ஊடாக பௌதீக பங்கேட்புடன் 25 மாவட்டங்களையும் சேர்ந்த சிறுவர்கள் மற்றும் முதியோரை இலக்காகக் கொண்டு நடாத்தப்பட்டது. நீதிமன்ற மருத்துவ அலுவலர், சிறுவர் நோயியல் நிபுணர்கள் வளவாளர்களாக இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்றார்கள்.

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக ஒன்லையின் முறை ஊடாக மற்றும் பௌதீக பங்கேட்புடன் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்.

| ஒன்லையின் முறை | | | | |
|---|---|---|---|---|
| **தொடர் இல.** | **மாவட்டம்** | **திகதி** | **பயனாளிகள்** | **பயனாளிகளின் எண்ணிக்கை** |
| 01 | மாத்தளை | 2021.10.08 | பெற்றோர் | 55 |
| 02 | காலி | 2021.10.11 | சிறுவர் மற்றும் பெற்றோர் | 186 |
| 03 | மாத்தறை | 2021.10.12 | பாலர் பாடசாலை ஆசிரியர்கள் | 213 |

| | | | | |
|---|---|---|---|---|
| 04 | களுத்துறை | 2021.10.12 | பாலர் பாடசாலை ஆசிரியர்கள் | 243 |
| 05 | வவுனியா | 2021.10.13 | பெற்றோர் | 83 |
| 06 | பொலன்னறுவை | 2021.10.13 | சிறுவர்கள் | 84 |
| 07 | நுவரெலியா | 2021.10.14 | சிறுவர்கள் | 84 |
| 08 | இரத்தினபுரி | 2021.10.14 | சிறுவர்கள் | 70 |
| 09 | கண்டி | 2021.10.15 | சிறுவர்கள் | 405 |
| 10 | ஹம்பாந்தோட்டை | 2021.10.18 | பாலர் பாடசாலை ஆசிரியர்கள் | 281 |
| 11 | புத்தளம் | 2021.10.18 | பாலர் பாடசாலை ஆசிரியர்கள் | 205 |
| 12 | குருநாகல் | 2021.10.21 | சிறுவர்கள் | 175 |
| 13. | யாழ்ப்பாணம் | 2021.10.22 | சிறுவர்கள் | 202 |
| 14. | கம்பஹா | 2021.10.22 | சிறுவர்கள் மற்றும் பெற்றோர் | 282 |
| 15 | மட்டக்களப்பு | 2021.10.23 | சிறுவர்கள் மற்றும் ஆசிரியர்கள் | 167 |
| 16 | மன்னார் | 2021.10.25 | சிறுவர்கள் மற்றும் பெற்றோர் | 63 |
| 17 | அநுராதபுரம் | 2021.10.25 | பாலர் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் சிறுவர்களுடன் நடவடிக்கை மேற்கொள்ளும் அலுவலர்கள் | 120 |
| 18 | பதுளை | 2021.10.26 | அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் சிறுவர்களுடன் நடவடிக்கை மேற்கொள்ளும் அலுவலர்கள் | 40 |

| | | | | |
|---|---|---|---|---|
| 19 | திருகோணமலை | 2021.10.26 | பாலர் பாடசாலை ஆசிரியர்கள் | 102 |
| 20 | முல்லைத்தீவு | 2021.10.27 | சிறுவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் | 60 |
| 21 | கேகாலை | 2021.10.27 | சிறுவர்கள் மற்றும் பெற்றோர் | 118 |
| 22 | அம்பாறை (சிங்கள மொழி மூலம்) | 2021.10.28 | அரச அலுவலர்கள், ஆசிரியர்கள், பாலர் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் | 66 |
| 23 | அம்பாறை (தமிழ் மொழிமூலம்) | | பாலர் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் | 63 |
| 24 | கிளிநொச்சி | 2021.10.29 | பாலர் பாடசாலை ஆசிரியர்கள் | 102 |
| 25 | மொனராகலை | 2021.10.29 | பெற்றோர் | 200 |
| பௌதீக | | | | |
| 26 | கொழும்பு | 2021.10.30 | சிறுவர்கள் | 200 |

**சித்துவிலி சித்தம் - 2021 அகில இலங்கை சித்திரம், சுவரொட்டி மற்றும் கார்டூன் போட்டி**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினர் உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு ஒவ்வொரு வருடமும் ஒழுங்கு செய்வதை நோக்காகக் கொண்ட சித்துவிலி சித்தம் 2021 அகில இலங்கை சித்திரம், சுவரொட்டி மற்றும் கார்டூன் போட்டியானது முதலில் 2021 யூன் மாதம் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், 2021.10.01 ஆம் திகதி ஆக்கங்களை கையேற்பது நிறைவு செய்யப்பட்டது.

இந்த போட்டிக்கு பிரதான அனுசரணையாளராக பங்களிப்பு வழங்கியது மக்கள் வங்கியாகும் என்பதுடன்,Guru Tv நிறுவனம் இலத்திரனியல் ஊடகப் பங்களிப்பு வழங்குவதுடன், உத்தியோகபூர்வ அச்சு ஊடகப் பங்களிப்பை விஜய சிறுவர் பத்திரிகை நிறுவகமும் வழங்கியது.

தேசிய மட்டத்திலான விருது வழங்கும் வைபவத்தை நடாத்துவது 2021.10.11 ஆம் திகதி இடம்பெற்றதுடன் அன்றைய தினம் சர்வதேச சிறுமியர் தின வைபவமும் நடாத்தப்பட்டது.



டபிள்யு. சமல்க நெத்மிது குமார – முதலாம் இடம் (சித்திரம்)

தரம் (4-5) கிரிஸ்துதேவ ஆண்கள் கல்லூரி, காலி



கே.ஐ. செனுதி காரியவசம் - முதலாம் இடம் (சித்திரம்)

தரம் (6-8) விஹாரைமஹதேவி மகளிர் ம.வி. கிரிபத்கொட



கே.பீ. வினுத் தேஜக – முதலாம் இடம் (சித்திரம்)

தரம் (9-11) புனித அலோசியஸ் தேசிய பாடசாலை, இரத்தினபுரி



ஐ.கே. டிமல்கா இந்துரன்பிட்டிய - முதலாம் இடம் (போஸ்டர்)

தரம் (9-11) தர்மாலோக மஹா வித்தியாலயம்,

பெல்மதுல்ல







டபிள்யு. நவோதா பெரேரா – முதலாம் இடம் (சித்திரம்)

தரம் (12-13) ஸ்ரீ தர்மாலோக ம.ம.வி., களனி

ராமசாமி ரவனியா - முதலாம் இடம் (போஸ்டர்)

தரம் (விசேட தேவையுடைய பிரிவு) தொழில் பயிற்சி நிறுவகம், வத்தேகம

**சர்வதேச சிறுமியர் தினத்தைக் கொண்டாடுதல்**

டிஜிரல் பரம்பரை எமது பரம்பரை எனும் தொணிப்பொருளின் கீழ் இம்முறை சர்வதேச சிறுமியர் தினக் கொண்டாட்டம் இடம்பெற்றது. இதன் போது இலங்கையில் முதற் தடவையாக ஒழுங்கு செய்யப்பட்ட சித்துவிலி சித்தம் அகில இலங்கை சித்திரம், போஸ்ரர் மற்றும் கார்டுன் போட்டியின் தேசிய விருது வழங்கும் விழா நடாத்தப்பட்டது. இதன் போது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் உலக சிறுவர் தினத்தை தொணிப்பொருளாகக் கொண்டு ஒழுங்கு செய்யப்பட்ட சித்துவிலி சித்தம் அகில இலங்கை சித்திரம், போஸ்ரர் போட்டியில் அகில இலங்கை மட்டத்தில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கிவைப்பது மகளிர், சிறுவர் அபிவிருத்தி, பாலர் பாடசாலை, ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சர் கௌரவ பியல் நிசாந்த அவர்கள், அமைச்சின் கௌரவ செயலாளர் திருமதி எஸ்.டி. குமாரி ஜயசேகர,தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பேராசிரியர் ஹரேந்திர சில்வா உள்ளிட்ட அதிதிகளினால் மேற்கொள்ளளப்பட்டது.






**சிறுவா் பாதுகாப்பு பற்றிய வீடியோ விளையாட்டு செயலியை வடிவமைப்பதை நிறைவு செய்தல்**

சிறுவா் பாதுகாப்பு பற்றிய வீடியோ விளையாட்டு முன்னோடி நிகழ்ச்சித்திட்டமொன்றாக ஆரம்பிக்கப்பட்டதுடன்,இது save the children, world vision, sarvodaya மற்றும் Leads ஆகிய நிறுவனங்களின் நிதி அனுசரணையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. சிறுவா் பாதுகாப்பின் போது சரியாக தீா்மானம் மேற்கொள்வது பற்றி சிறுவா்களுக்கு வழிகாட்டல்களும் இதன் மூலம் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது.






**தேசிய சிறுவா் பாதுகாப்பு அதிகாரசபையின் தவிசாளா் மற்றும் பிரதித் திவசாளா் வளவாளா்களாக பங்களிப்பு வழங்கியமை**

தேசிய சிறுவா் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிறுவா்களின் பாதுகாப்பு மற்றும் சிறுவா்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடா்பாக மக்களுக்குத் தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல் ம்றறும் கல்வி அறிவைப் பெற்றுக் கொடுப்பதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட செயலமா்வுகள், கருத்தரங்குகள் மற்றும் கலந்துரையாடல்கள் பின்வருமாறாகும்.

| | |
|---|---|
| 01 | 2021.01.07 TV 1 ஜாதிக்க மெஹவர |
| 02 | ஜாதிக்க மெஹவர 2021-03-05 |
| 03 | 2021.05.03 உத்தர ஹோராவ TV 1 |
| 04 | இரிதா ஆயுபோவன் 2021-06-20 |
| 05 | பின்பர உதேசன 2021.06.21 |
| 06 | பின்பர உதேசன 2021.06.29 |
| 07 | 2020.07.07- Siyatha Interview |
| 08 | 2021.07.05- withDerana |
| 09 | 2021.07.11 TNL ஒபகே கெடலு |
| 10 | 2021.07.12- ஹத்வெனி பெய |










**இலங்கை சிறுவர் பாதுகாப்பு செயலி 1929 (1929 Sri Lanka Child Protection App) சிறுவர்கள் மற்றும் பொது மக்களுக்காக வெளியிடல்.**

1929 கையடக்க அப் / நடமாடும் செயலி தயார் செய்யும் பணி நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முதற் தடவையாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையுடன் இணைந்து Save the children international, World Vision, Sarvodaya fusion and Leads ஆகிய நிறுவனங்களின் கொடையொன்றாக ஆரம்பிக்கப்பட்டது. இது முன்னோடிக் கருத்திட்டமொன்றாகும்.

இதன் மூலம் குறுஞ்செய்தி, ஒலிப்பதிவு மற்றும் வீடியோவுடன் முறைப்பாடுகளை சாட்சியங்களுடன் வினைத்திறன்மிக்கவாறு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எமக்கு முறைப்பாடு செய்ய முடியும்.

**செய்தி அறிவித்தல்களை வெளியிடல்**

துர்நடத்தைகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு சிறுவர்களுக்கு உரித்தானதாக உள்ள உரிமைகள் பற்றி மற்றும் சிறுவர் துர்நடத்தைகளை தடுக்கும் முறைகள் பற்றி விழிப்புணர்வூட்டுவது தொடர்பாக 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்குக் கிடைத்துள்ள தத்துவங்களுக்கு அமைய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் விசேட பொலிஸ் விசாரணை பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற விசேட பொலிஸ் விசாரணைகள், பொது மக்களுக்கு செய்யப்படும் விசேட அறிவித்தல்கள், தவிசாளரினால் பொது மக்களுக்கு வெளியிடப்படும் அறிவிப்புக்கள் போன்ற விடயங்கள் ஊடக அறிக்கைகளாக வெகுசன ஊடகங்களுக்கு வெளியிடப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டு செய்தி அறிக்கைகள் 16 வெளியிடப்பட்டன.

| இல. | திகதி | செய்தி அறிவித்தல் |
|---|---|---|
| 01 | 2021 சனவரி 04 | சிறுவர்களை சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களிலிருந்தும் பாதுகாத்து அவர்களுக்கு மென்மேலும் பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுப்பதற்கு சகல தரப்பினர்களும் ஒன்றாக இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். |
| 02 | 2021 சனவரி 20 | 1929 இலங்கை சிறுவர் பாதுகாப்பு செயலியை பொது மக்களுக்கு வெளியிட்டு வைத்தல் |
| 03 | 2021 மார்ச் 03 | பராயமடையாத ஒரு சிறுமியை கடும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய ஆளொருவருக்கு 12 வருட கடுழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டமை |
| 04 | 2021 மார்ச் 26 | காணாமற் போன ஒரு பிள்ளையை கண்டுபிடிப்பதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை பொது மக்களின் உதவியை நாடுகிறது |
| 05 | 2021 ஏப்ரல் 16 | காணாமற் போன ஒரு பிள்ளையை கண்டுபிடிப்பதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை பொது மக்களின் உதவியை நாடுகிறது |
| 06 | 2021 மே 20 | கொவிட் 19 தொற்றுக் காரணமாக அநாதரவாகும் பிள்ளைகள் பற்றிய தகவல்கள் இருப்பின், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 1929 தொலைபேசி சேவைக்கு உடனடியாக அறியத்தரவும். |
| 07 | 2021 யூன் 12 | சிறுவர் ஊழியத்துக்கு எதிரான சர்வதேச தின செய்தி – சிறுவர் ஊழியராக பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வயதெல்லை 14 முதல் 16 ஆக அதிகரிப்பு |
| 08 | 2021 யூன் 14 | கொவிட் 19 தொற்றுக் காரணமாக வீட்டில் தங்கியிருக்கும் சிறுவர்கள் மற்றும் பெரியவர்களுக்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அகில இலங்கை சித்திர, போஸ்டர் மற்றும் கார்டுன் போட்டி |
| 09 | 2021 யூலை 03 | 15 வயது சிறுமி ஒருவரை துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கிய ஆளொருவர் மற்றும் அதனை ஊக்குவித்த ஒரு பெண், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் கைது. |
| 10 | 2021 யூலை 11 | 14 வயது சிறுமி ஒருவரை துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கிய ஆளொருவர் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் கைது. |

| | | |
|---|---|---|
| 11 | 2021 யூலை 19 | 13 வயது சிறுமி ஒருவரை துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கிய ஒரு தேரா் மற்றும் சந்தேக நபா்கள் 03 போ் தேசிய சிறுவா் பாதுகாப்பு அதிகாரசபையினால் கைது. |
| 12 | 2021 யூலை 31 | 11 வயது சிறுமி ஒருவரை கடும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கிய 62 வயது பாட்டன் போ் தேசிய சிறுவா் பாதுகாப்பு அதிகாரசபையினால் கைது. |
| 14 | 2021 அக்டோபா் 01 | 2021 ஆண்டின் உலக சிறுவா் தினத்தை முன்னிட்டு தேசிய சிறுவா் பாதுகாப்பு அதிகாரசபையினால் பல நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல் |
| 15 | 2021 அக்டோபா் 11 | 2021 ஆண்டின் சா்வதேச சிறுமியா் தினத்தை முன்னிட்டு தேசிய வைபவத்துக்காக தேசிய சிறுவா் பாதுகாப்பு அதிகாரசபையினால் பல விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் |
| 16 | 2021 நவம்பா் 23 | தேசிய சிறுவா் பாதுகாப்பு அதிகாரசபையின் புதிய தவிசாளா் சிரேஷ்ட விரிவுரையாளா் திரு உதய குமார அமரசிங்கவின் செய்தி |

**சிறுவா் அபிவிருத்தி நிலையங்களை ஒழுங்குறுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவா் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டத்தின் (14) (க) பிரிவுக்கமைய சிறுவா்களுக்கு சிறுவா் அரவணைப்புச் சேவைகளை வழங்கும் சகல சமய மற்றும் அறக்கட்டளை நிலையங்களையும் (சிறுவா் அபிவிருத்தி நிலையங்கள்) கண்காணிப்புச் செய்வதும் ஒழுங்குறுத்துவதும் தேசிய சிறுவா் பாதுகாப்பு அதிகார சபைக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டு மேற்படி கண்காணிப்புக்கு அடிப்படையாகக் கொள்ளப்படுகின்ற சிறுவா் அபிவிருத்தி நிலையங்களுக்கான ஆகக் குறைந்த தரநியமங்கள் தயாா் செய்யப்பட்டன. 2001 ஆம் ஆண்டு இணையத்தளம் ஊடாக ஒடிகே மென்பொருளைப் பயன்படுத்தி தொண்டா் சிறுவா் அபிவிருத்தி நிலையங்கள் 320 ஒழுங்குறுத்தப்பட்டதுடன், இதன் இறுதிப் பெறுபேறுக்கு அமைய மேற்படி நிறுவனங்கள் வகைப்படுத்தப்பட்டன. ஒழுங்குறுத்தல் தகவல்கள் பற்றிய இறுதித் தரவு அறிக்கைகள் அமைச்சின் செயலாளா் மற்றும் தேசிய நன்னடத்தை ஆணையாளருக்கு தகுந்த நடவடிக்கைகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

**நாளாந்த பத்திரிகைகளை ஒழுங்குறுத்தல்**

நாளாந்தம் பத்திரிகைகளில் அறிக்கையிடப்படுகின்ற சிறுவா் பாதுகாப்பு பற்றிய செய்திகளை அறிக்கையிடும் போது ஆள்அடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் சிறுவா்கள் தொடா்பான செய்தி அறிக்கையிடல் சம்பவங்கள் உள்ளதா என்பது ஒழுங்குறுத்தப்படுகின்றது. மேலும் தாா்மீகமற்ற செய்தி அறிக்கையிடல் பற்றியும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. நாளாந்தம் இப்பணி மேற்கொள்ளப்படுவதுடன், சகல அலுவலா்களுக்கும் வட்ஸ்அப் ஊடாக பகிா்ந்தளிக்கப்படுகின்றது. மேலும் அவசியமான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஊடக நிறுவனங்கள் விழிப்புணா்வூட்டப்படுகின்றன.



2021 ජූලි මස 12 වැනිදා සඳුදා

දස හැවිරිදි දැරිය අනියම් සැමියා ළඟ තබා මව තවත් හොර දීගෙක ගිහින්

- 20 දක්වා රිමාන්ඩ්



Daily Mirror July 12 2021 pg A2

Brother-in-law arrested for sexual abuse on 14-year-old girl

He was arrested following a complaint received by the Special Investigation Unit of the National Child Protection Authority. The suspect was produced before the Colombo Chief Magistrate's Court and remanded till July 23 on charges of molesting a minor.



දහතරේ දැරිය ගේක රඳවාගත් බැකෝ රියැදුරායි මවයි අත්අඩංගුවට

**1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் 14(ஐ) பிரிவுக்கு அமைய அப்பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது. இது 2010 யூலை மாதம் 22 ஆம் திகதி முதல் தேசிய சிறுவர் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் தாபிக்கப்பட்டு பேணிவரப்படுகின்றது. இந்த ஆண்டில் இப்பிரிவின் மூலம் 10,654 முறைப்பாடுகள் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டதுடன், 2021 ஆம் ஆண்டில் இதற்கு இசைவாக 1929 கையடக்க செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதனூடாக 43 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அதாவது அதிகாரசபைக்குக் கிடைத்துள்ள மொத்த முறைப்பாடுகளில் 95 சதவீனதமானவை இந்தப் பிரிவின் ஊடாக கிடைத்துள்ளன.



**வீடியோ வாக்குமூலங்களை ஒளிப்பதிவு செய்தல்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14 (ஓ) பிரிவுக்கு அமைய இப்பிரிவு தாபிக்கப்பட்டுள்ளதுடன்,அதற்கு 14(உ) பிரிவும் உதவி வழங்குகின்றது. மேலும் 1999 இன் 32 ஆம் இலக்க சாட்சியங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கு அமைய இப்பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன், இந்த ஆண்டில் வீடியோ ஒளிப்பதிவுக்கான 143 கோரிக்கைகள் கிடைத்துள்ளதுடன், அவற்றில் 63 வீடியோ சாட்சிகள் ஒளிப்பதிவு செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு ஒளிப்பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களில் 78 ஒளிப்பதிவுகள் நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், ஒளிப்பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களில் 76 தொடர்பில் தட்டெழுத்து செய்யும் பணிகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும் இந்த ஆண்டில் வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்தமை தொடர்பில் சாட்சியமளிப்பதற்காக 29 மேல் நீதிமன்றங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த சேவையை மென்மேலும் சிறுவர்களுக்கு சாதகமானதாக மாற்றியமைப்பதை பண்முகப்படுத்தும் நோக்கத்துடன் வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்யும் கலையகங்கள் 09 ஐ மாகாண மட்டத்தில் தாபிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன்,அதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. மேலும் வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்யும் பிரிவை தொலைஇயங்கும் நேரடி கற்புல செவிப்புல சாட்சியமளிக்கும் கலையகமாக மாற்றியமைக்கத் தேவையான பிரேரணைகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**புலனாய்வு மற்றும் சைபர் அவதானிப்பு நடவடிக்கைகள்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14 (உ) (எ) மற்றும் 24, 33, 34, 35, 36, 37, 40 ஆகிய பிரிவுகளுக்கு அமைய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு புலனாய்வு மற்றும் சைபர் அவதானிப்பு பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் இப்பிரிவுக்கு 1066 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. மேற்படி சகல முறைப்பாடுகளுக்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்படி 1066 முறைப்பாடுகளில் 268 முறைப்பாட்டுக் கோப்புக்கள் பணிப்பாளர் - சட்டத்தை அமுல்படுத்தலிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இணையத்தள துஷ்பிரயோகங்கள் தொடர்பான 252 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன், மேற்படி சகல முறைப்பாடுகள் தொடர்பிலுமான புலனாய்வு மற்றும் கண்காணிப்பு பணிகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன. 2021 ஆம் ஆண்டு இந்தப் பிரிவுக்குக் கிடைத்த முறைப்பாடுகளில் பின்னாய்வுக்காக 272 முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டன. மேலும் பொலிஸ் நிலையங்களில் இடம்பெறுகின்ற சிறுவர் துஷ்பிரயோகங்களின் விசாரணைகளை ஒழுங்குறுத்துவதற்கு 23 பீ அறிக்கைகள் கோரப்பட்டுள்ளன. மேலும் நீதிமன்ற உத்தரவுகள் 02 இற்குத் தேவையான விசாரணை மற்றும் தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டன.

அதிகாரசபையினால் சிறுவர் துஷ்பிரயோகங்கள் சம்பந்தமான சம்பவக் கருத்தரங்குகள் 77 இற்கு இந்த ஆண்டில் தேவையான ஒருங்கிணைப்பு மற்றும் வழிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. அதிகாரசபைக்குக் கிடைத்த சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகளுக்கு

சாட்சியங்களின் தகவல் கோரலின் (NCPA/INV/24/1a) கீழ் 07 கோரிக்கைகள் விடுக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. குற்றவாளிகளை கண்டறிவதற்காக NCPA/INV/14/1b கீழ் தொலைபேசித் தகவல் கோரல்கள் 115 மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்குத் தேவையான விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

அதிகாரசபை சட்டத்தின் 33 ஆம் பிரிவுக்கு அமைய தத்துவமளிக்கப்பட்ட அலுவலர்களை நியமனம் செய்வது 02 மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இது அதிகாரசபையின் தத்துவமளிக்கப்பட்ட விசாரணைகளாக அமுலில் உள்ளது. அதிகாரசபைக்கு வருகைதந்து மேற்கொள்ளும் முறைப்பாடுகளை பொறுப்பேற்றுக் கொள்வது (PP- Personal Presentation) 231 மேற்கொள்ளப்பட்டுள்ளன.

NCPA/INV/24/1k எனும் பருவகால அறிக்கைகள் மற்றும் தகவல் கோரல் ஒழுங்குறுத்தல்கள் 04 வழங்கப்பட்டுள்ளதுடன், அவை தொடர்பான அறிக்கைகள் தேவையான நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் விசாரணை நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டு நடவடிக்கை வழிகாட்டல்களின் 2229 பிரதிகள் அதிகாரசபையின் அலுவலர்கள் அனைருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன், எஞ்சியுள்ள புத்தகங்கள் அனைத்தும் எதிர்காலத்தில் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள அலுவலர்களுக்கு வழங்கப்படவுள்ளன. இந்த ஆண்டில் எமது பிரிவுக்கு 02 நீதிமன்ற உத்தரவுகள் கிடைத்துள்ளதுடன் அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் அறிக்கையிடப்பட்டன.

சைபர் குற்றச்செயல்கள் தொடர்பாக சிறுவர்களுக்கு இணையத்தில் தகவல்கள் பரப்புவரை நிறுத்த 35 தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

வேறு பொலிஸ் நிலையங்களினால் மேற்கொள்ளப்படும் சிறுவர் துஷ்பிரயோக விசாரணைகளை ஒழுங்குறுத்தி அதற்கு முறையான நியாயத்தன்மை கிடைப்பதில்லை என்பது உறுதி செய்யப்பட்டதன் காரணமாக அதிகாரசபையின் கீழ் விசாரணைகளை பொறுப்பேற்றுக் கொள்வது 01 இந்த ஆண்டில் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

2020 ஆம் ஆண்டு அதிகாரசபைக்கு அறிக்கையிடப்பட்ட சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய பூரண பகுப்பாய்வு அறிக்கை தயார் செய்யப்பட்டதுடன், 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 31 வரையான முறைப்பாடுகள் பற்றிய பகுப்பாய்வு அறிக்கையும், அதிகாரசபைக்கு பத்து ஆண்டுகளில் அறிக்கையிடப்பட்டுள்ள முறைப்பாடுகள் பற்றிய பகுப்பாய்வு அறிக்கையும் தயார் செய்யப்பட்டது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் விசாரணை செயன்முறையை முறைப்படுத்துவற்காக முறைப்பாடுகளை வழிப்படுத்தும் வழிகாட்டல்களுக்கு அமைய தேவையான படிவங்கள் மற்றும் படிவங்களின் புத்தகமும் தயார் செய்யப்பட்டுள்ளது.

- விசாரணை குறிப்பு புத்தகம்
- விசாரணை பற்றுச்சீட்டுப் புத்தகம்

- பொருட்களை பொறுப்பேற்றுக் கொள்ளும் பதிவேடு
- 33 கட்டளை படிவப் புத்தகம்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் இணையத்தள விசாரணை நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதற்கு IMF நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்துகொள்வது சம்பந்தமான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**வைத்தியசாலையில் மேற்கொள்ளும் நிறுவனம்சார் சம்பவ மீளாய்வுக் கலந்துரையாடலை விளைதிறன்மிக்கவாறு மேற்கொள்ளல்.**

துஷ்பிரயோகத்திற்கு ஆளான சிறுவர்களான பாதிக்கப்பட்டவர்களை வைத்தியசாலையிலிருந்து அகற்ற முன்னர் மேற்படி பாதிக்கப்பட்ட சிறுவர்களை தகுந்த பாதுகாவலரின் கீழ் கொண்டு வருதல் வேண்டும். அதற்கு உகந்த பாதுகாவலரை தீர்மானம் செய்வது வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படுகின்ற நிறுவனம்சார் சம்பவ மீளாய்வு கலந்துரையாடலை அடுத்தாகும். இதற்கு மாவட்ட மற்றும் பிரதேச ரீதியில் அலுவலர்கள் பங்குபற்றுவார்கள்.

நிறுவனம்சார் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான சம்பவங்களை மீளாய்வு செய்வதை பல்துறைசார் அணுகுமுறையின் கீழ் மேற்கொள்ளல் மற்றும் பிள்ளையின் உச்சளவான நலனை உறுதி செய்வது இதன் முக்கிய குறிக்கோளாகும். இதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவலர்களின் பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவலர்களை துரிதமாக சம்பந்தப்படுத்திக் கொள்ள அலுவலர்களின் தகவல்களை கொண்ட ஆவணமொன்றை ஒவ்வொரு வைத்தியசாலை வளவிலும் காட்சிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| **தொடர் இல.** | **வைத்தியசாலை வகை** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 01 | தேசிய வைத்தியசாலை | 01 |
| 02 | போதனா வைத்தியசாலை | 21 |
| 03 | மாகாண பிரதான வைத்தியசாலை | 02 |
| 04 | மாவட்ட வைத்தியசாலை | 19 |
| 05 | ஆதார வைத்தியசாலை | 71 |
| மொத்தம் | | 114 |

இந்த ஆண்டில் அதிகாரசபைக்கு கிடைத்துள்ள சம்பவ கருத்தரங்குகள் 77 இற்கு சிபாரிசுகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

**சிறுவர் பாதுகாப்பு பற்றிய சிறுவர் ஆட்கடத்தை இனங்காணல், அறிக்கையிடல் மற்றும் விசாரணை செய்வதற்கான பயிற்சி பாடவிதானம், கற்றல் பணித் தொகுப்பு மற்றும் கருவிகள் வழிகாட்டல் தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அலுவலர்களை விழிப்புணர்வூட்டல்.**

சிறுவர் ஆட்கடத்தை இனங்காணல், அறிக்கையிடல் மற்றும் விசாரணை செய்வதற்கான பயிற்சி பாடவிதானம், கற்றல் பணித் தொகுப்பு மற்றும் கருவிகள் பற்றி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவலர்களை பயிற்றுவிப்பதற்காக கொழும்பு பல்கலைக் கழகத்தின் மனித உரிமைகள் கற்கை மையத்தினால் பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது. இதற்கமைய அலுவலர்கள் 261 பேருக்கு சூம் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 17 அமர்வுகள் 32 மணி நேரம் நடாத்தப்பட்டதுடன், சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலமான 02 TOT நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

**சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக சிறுவர் ஆட்கடத்தலை இனங்காணல், அறிக்கையிடல் மற்றும் விசாரணை செய்வதற்கான பயிற்சி பாடவிதானம், கற்றல் பணித் தொகுப்பு மற்றும் கருவிகள்" வழிகாட்டல்கள் தொடர்பில் பொலிஸ் அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்**

சிறுவர் ஆட்கடத்தலை இனங்காணல், அறிக்கையிடல் மற்றும் விசாரணை செய்வதற்கான பயிற்சி பாடவிதானம், கற்றல் பணித் தொகுப்பு மற்றும் கருவிகள் வழிகாட்டல்கள் தொடர்பில் பொலிஸ் அலுவலர்களுக்கு அறிவு, மனப்பாங்கு மற்றும் திறமைகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் சிறுவர்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளும் பொலிஸ் அலுவலர்களின் சேவையை சிறுவர்களுக்கு சாதகமானவாறு மேற்கொள்வதற்கும், தொடர்ந்தும் அதனை பரந்தளவில் வலுவூட்டுவதையும் நோக்காகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் 2021 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்டது.

அதற்கமைய, மேற்படி நிகழ்ச்சித்திட்டம் 2021 இல் நடாத்தப்பட்ட பின்னர் நாட்டின் 19 மாவட்டங்களுக்கு ஏற்பாடுகள் வழங்கப்பட்டு பொலிஸ் அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த ஆயத்தப்படுத்தப்பட்டது. இதன் போது கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, கேகாலை, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, மாத்தளை, மொனராகலை, அநுராதபுரம், நுவரெலியா, கண்டி, பொலன்னறுவை, அம்பாறை, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, புத்தளம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய 19 மாவட்டங்களிலும் பங்கேற்ற பொலிஸ் அலுவலர்களின் எண்ணிக்கை 1439 பேர் ஆவார்கள்.

**எச்.ஐ.வீ. மற்றும் பாலியல் நோய்கள் பற்றி இளம் பராயத்தைச் சேர்ந்த சிறுவர்களை விழிப்புர்வூட்டும் கையேடு தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவலர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்**

பாலியல் வன்புணர்ச்சி அல்லது சிக்கல்களுக்கு ஆளான இளம்பராய சிறுவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோரை எச்.ஐ.வீ. மற்றும் பாலியல் நோய்கள் பற்றி விழிப்புணர்வூட்டும் போது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவலர்களுக்கு வழிகாட்டுவதற்கு உருவாக்கப்பட்ட வெளிக்கள கையேட்டைப் பயன்படுத்துவது பற்றிய முறை தொடர்பில்

ஒன்லையின் முறையில் 2021 ஆம் ஆண்டில் அலுவலர்களை சிங்கள மொழி மூலம் விழிப்புணர்வூட்டும் 2 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், அதன் மூலம் பயிற்றப்பட்ட மொத்த அலுவலர்களின் எண்ணிக்கை 147 பேர் ஆகும். இத்றகு வளப் பங்களிப்பு சுகாதார அமைச்சின் தேசிய பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் மருத்துவர்களினால் வழங்கப்பட்டது.




**சிறுவர் பாதுகாப்பு தொடர்பான அறிவை இற்றைப்படுத்தல் மற்றும் அலுவலர்களின் திறன்களை வளர்த்தல்**

அறிவை இற்றைப்படுத்துவதற்காகஒவ்வொரு மாதமும் சூம் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 03 மணி நேரம் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்திப் பயிற்சி வழங்கப்படுகின்றது.

01. அதிகாரசபையின் சகல அலுவலர்களுக்கும் பயிற்சியொன்று நடாத்தப்பட்டுள்ளது. - Physical Humiliating by Professor Priyanjali De Zoysa
02. தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திரு ஜே. தத்பரன் அவர்களினால் Child protection case management எனும் தலைப்பின் கீழ் அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.
03. 2021.02.18 ஆம் திகதி திரு ஆனந்த கலப்பத்தி அவர்களினால் Mental Health and Psychosocial Support இன் கீழ் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது.

**சட்ட ரீதியான பணிகள்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளது.

அதிகாரசபையின் சட்டத்திற்கு மேலதிகமாக பின்வரும் சட்டங்கள் தொடர்பிலும் அதிகாரசபையின் சட்டப் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

- 2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சுனாமி விசேட ஏற்பாடுகள் சட்டம்
- 2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறை நடவடிக்கைகளைத் தடுக்கும் சட்டம்

2007 இன் 56 ஆம் இலக்க குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயம் சட்டத்தின் ஏற்பாடுகளை மையமாகக் கொண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை பிள்ளையின் உச்சளவான நலனுக்காக நடவடிக்கை மேற்கொள்வதை மேம்படுத்துவதன் மூலம் பிள்ளையின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றது.

அதிகாரசபையின் சட்டப் பிரிவின் பணிகளாவன,

- சிறுவர் பாதுகாப்புக்கான தடுத்தல் பொறிமுறை மற்றும்
- பதில் நடவடிக்கை மேற்கொள்ளும் பொறிமுறை

என்ற வகையில் வகைப்படுத்தப்பட முடியும்.

- ➢ சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.
- ➢ அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளானவர்களின் பாதுகாப்புக்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.
- ➢ சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுக்கும் தேசிய கொள்கையை விளைதிறன்மிக்கவாறு அமுல்படுத்தத் தேவையான சட்டரீதியான, நிருவாக அல்லது வேறு திருத்தங்களை சிபாரிசு செய்தல்.
- ➢ சிறுவர் பாதுகாப்பு பற்றிய சமவாயங்கள், கொள்கைகள், சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு வசதிகளை செய்துகொடுத்தல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்தல்.
- ➢ சிறுவர் பாதுகாப்பு பற்றிய சிக்கல்கள் தொடர்பில் ஆலோசனை மற்றும் அழுத்தம் கொடுப்பதை ஏற்படுத்தல்.
- ➢ சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக இலங்கை அரசின் சர்வதேச கடப்பாடுகள் பற்றிய இறுதி அவதானிப்புக்களுக்கு மற்றும் சிபாரிசுகளுக்கு பதில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு வசதிகளை செய்துகொடுத்தல்.

1. ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் (UNCRC) மற்றும் அதன் விருப்பத்துக்குரிய அமைப்புக்கள் 2
2. பெண்களுக்கு எதிரான சகல வகையிலுமான பாரபட்சம் காட்டல்களையும் ஒழிப்பதற்கான சமவாயம் (CEDAW)
3. குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயம்(ICCPR)
4. ஐக்கிய நாடுகளின் சர்வதேச திட்டமிட்ட குற்றச் செயல்களுக்கு எதிரான சமவாயம் (UNTOC)

5. ஐரோப்பிய சமூகத்தின் GSP ± சலுகை முறை

- சட்டம் மற்றும் பிள்ளை பற்றிய பாடசாலை பாடவிதானத்தை தயார் செய்வது தொடர்பில் வசதிகளை செய்தல்.
- சிறுவர் பாதுகாப்பு பற்றிய சிக்கல்கள் தொடர்பாக சட்ட ஆலோசனை மற்றும் ஒத்துழைப்பு வழங்குதல்.

**2021 ஆம் ஆண்டில் சட்ட ஆலோசனை வழங்கியமை.**

| தொடர் இல. | சட்ட ஆலோசனை வழங்கிய முறையியல் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | தொலைபேசி மூலம் | 1091 |
| 02 | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு வருகைதந்த | 45 |
| மொத்தம் | | 1136 |

- துஷ்பிரயோகத்திற்கு ஆளான ஆட்கள், சுனாமியால் பரிதக்கப்பட்ட சிறுவர்களுக்கு ஆலோசனை மற்றும் சடட உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல், குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் சிறுவர் ஊழியம் சம்பந்தமான செயற்பாடுகளின் போது சட்ட உதவி வழங்குதல் மற்றும் உரிய ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல்.

**2005 இன் 16 ஆம் இலக்க சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்துக்கு அமைய வழக்குகளின் எண்ணிக்கை**

| தொடர் இல. | நீதவான் நீதிமன்றம் | வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | காலி | 02 |
| 02 | ஹம்பாந்தோட்டை | 12 |
| 03 | மாத்தறை | 06 |
| 04 | பத்தரமுல்லை | 02 |
| 05 | பலப்பிட்டி | 02 |
| 06 | வலஸ்முல்ல | 02 |
| 07 | அம்பாறை | 07 |
| 08 | மட்டக்களப்பு | 09 |
| மொத்தம் | | 42 |

பின்வரும்

சட்டங்களின் ஏற்பாடுகள் எதுவும் மீறப்படுவதன் மூலம் இடம்பெறுகின்ற சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகளை வழிப்படுத்தல்.

- பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை சேவையில் ஈடுபடுத்துவது பற்றிய சட்டம்
- சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் பற்றிய கட்டளைச் சட்டம்
- கல்விக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட கட்டாயக் கல்வி சம்பந்தமான கட்டளைகள்

**2021 ஆம் ஆண்டில் முறைப்பாடுகளை வழிப்படுத்தல்**

| தொடர் இல. | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | 1929 ஊடாக சட்டப் பிரிவில் சமர்ப்பிக்கப்பட்ட மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 2123 |
| 02 | 2011 – 2020 இடையே அறிக்கையிடப்பட்ட முறைப்பாடுகள் பற்றிய பின்னாய்வுகளின் எண்ணிக்கை | 873 |
| 03 | 2011 – 2021 வரையான காலப்பகுதி தொடர்பாக நிறைவு செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டுக் கோப்புகளின் எண்ணிக்கை | 1884 |
| 04 | 2021 ஆம் ஆண்டில் சட்டப் பிரிவிடம் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளில் 2021 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 544 |
| மொத்தம் | | 5424 |

**சட்டரீதியான விடயங்களின் போது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையை பிரதிநிதித்துவம் செய்தல்**

- நீதிமன்றம் - நீதவான நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றம்
- ஆணைக்குழுக்கள் - மனித உரிமைகள் ஆணைக்குழு, தகவல் அறியும் ஆணைக்குழு, பத்திரிகை ஆணைக்குழு
- தொழில் நியாய சபை

**2021 ஆம் ஆண்டில் நீதிமன்றங்களில் ஆஜரான சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை சிறுவர்**

| தொடர் இல. | நீதிமன்றம் | வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | கொழும்பு மாவட்ட நீதிமன்றம் | 01 |
| 02 | கொழும்பு நீதவான் நீதிமன்றம் | 01 |
| 03 | கங்கொடவில நீதவான் நீதிமன்றம் | 04 |
| 04 | நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றம் | 03 |
| 05 | தம்புளை நீதவான் நீதிமன்றம் | 01 |
| 06 | பலபிட்டி நீதவான் நீதிமன்றம் | 01 |

| | | |
|---|---|---|
| 07 | பத்தரமுல்ல நீதவான் நீதிமன்றம் | 03 |
| 08 | காலி நீதவான் நீதிமன்றம் | 03 |
| 09 | கம்பஹா நீதவான் நீதிமன்றம் | 01 |
| 10 | பொல்கஹவல நீதவான் நீதிமன்றம் | 01 |
| 11 | நுவரெலியா நீதவான் நீதிமன்றம் | 02 |
| | ***மொத்தம்*** | **21** |

**சிறுவர்கள் பற்றி ஊடகங்களில் அறிக்கையிடுவதன் சட்டபூர்வமான தன்மை பற்றிய கண்காணிப்பு**

- 2021 ஆண்டு சட்டபூர்வமான தன்மையை பரிசோதனை செய்தமை – 1089 மேற்கொள்ளப்பட்டது.
- சிக்கலான அல்லது சட்ட விரோத ஊடக அறிக்கையிடலை தடுப்பது பற்றி ஊடக நிறுவனங்களுக்கு சட்டரீதியான வழிகாட்டல்கள் 05 மேற்கொள்ளப்பட்டன.

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சட்டரீதியான ஆவணங்களை தயார் செய்தல்**

- புரிந்துணர்வு உடன்படிக்கைகள் - 22
- சட்டரீதியான ஆவணங்கள் - 134
- ஆவணங்களை தயார் செய்த் - 530

**சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய குற்றவியல் வழக்கு விசாரணைகளை கண்காணிப்புச் செய்தல்.**

வளவாளர்களாவதன் மூலம் சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர்கள் சார்ந்த சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் போன்றன தொடர்பான அறிவு மற்றும் திறமைகளை பகிர்ந்தளிப்பதன் மூலம் விழிப்புணர்வூட்டலை மேற்கொள்ளல்.

**வெபினார்களில் பங்கேற்றல் (Webinar)**

| தொடர் இல. | தலைப்பு | திகதி | இடம் |
|---|---|---|---|
| 01 | தொற்று நோய்க்கு மத்தியில் நியாயம் - சட்டம் பற்றி விழிப்புணர்வூட்டல் | 2021.02.06 | விசாகா வித்தியாலயம் |
| 02 | இளமைப் பருவத்தில் கர்ப்பமடைவதை தடுத்தல் | 2021.03.17 | மகளிர், சிறுவர் அபிவிருத்தி, பாலர் |

| | | | |
|---|---|---|---|
| | | | பாடசாலை மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள், கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு |
| 03 | சிறுவர்களின் உடல்சார் தண்டனையை நிறைவு செய்யும் சர்வதேச தினம் | 2021.03.30 | யுனிசெவ் |
| 04 | பராயமடையாதவர்களின் பொறுப்பு – சட்டம் மற்றும் செயன்முறை | 2021.05.15 | இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் |
| 05 | சிறுவர் உரிமைகள் மற்றும் கொவிட் 19 | 2021.06.15 | இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் |
| 06 | எமது பிள்ளைகள் உண்மையில் பாதுகாப்பாக உள்ளார்களா? | 2021.07.01 | சீ 4 சட்ட அமைப்பு |
| 07 | சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுத்தல் - பலம்மிக்க தேசிய கொள்கைசார் செயற்பணி | 2021.07.12 | யுனிசெவ் |
| 08 | உறுதியற்ற காலப்பகுதியில் சிறுவர் பாதுகாப்பு மற்றும் நல்ல நிலைத்திருத்தல் | 2021.08.14 | லங்கா அவகாச |
| 09 | சிறுவர் உரிமைகள் பற்றிய மாதிரி – ஐக்கிய நாடுகள் அமைப்பு | 2021.09.11 | மியுசியஸ் கல்லூரி |
| 10 | பாதுகாப்பான சிறுவர் பரம்பரைக்கு சட்டரீதியான செயற்பணி மற்றும் வெகுசன ஊடகப் பொறுப்பு | 2021.09.14 | களனி பல்கலைக் கழகம், வெகுசன தொடர்பாடல் கற்கைப் பிரிவு |
| 11 | சிறுவர்கள் சார்ந்த சம்பவங்களை அறிக்கையிடல் மற்றும் ஊடகங்களின் பொறுப்பு | 2021.09.30 | இலங்கை பத்திரிகை சபை |

**வெபினார் ஒழுங்கு செய்தல் (Webinar) (சிங்களம் மற்றும் தமிழ் மொழி)**

01. பிள்ளையின் உச்சளவான நலன் சட்டத்தின் கண்ணோட்டத்தில் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் கீழ் வரும் சிறுவர் துஷ்பிரயோகங்கள்

02. குற்றவியல் நியாயச் செயன்முறையில் பிள்ளையின் பாதுகாப்பு மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பொறுப்பு

**விரிவுரைகளுக்கான பங்களிப்பு**

01. சிறுவர் பாதுகாப்பு பற்றிய சட்டங்கள் - ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகம், குற்றவியல் பிரிவு, 2021.07.19 ஆம் திகதி

02. சிறுவர் ஆட்கடத்தல் மற்றும் சிறுவர் ஊழியத்தை ஒழித்தல் - மிரிஹான சேவைப் பயிற்சி நிலையம்

03. மருத்துவப் பட்டப் பின் படிப்பு நிறுவகம் - சிறுவர் சுகாதாரம் பற்றிய டிப்ளோமா, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் செயற்பணி – 2021.11.29 ஆம் திகதி

04. மருத்துவப் பட்டப் பின் படிப்பு நிறுவகம் - MD சமுதாய மருத்துவம் - தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை 2021.11.09 ஆம் திகதி

**விசேட பொலிஸ் புலனாய்வுகள்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவையூடாக மற்றும் வேறு விதமாக பொது மக்களிடமிருந்து கிடைக்கின்ற சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாடுகளை துரிதமாக புலனாய்வு செய்து சட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவு இயங்கி வருகின்றது. அதற்காக 24 மணிநேரமும் இயங்கும் வகையில் விசேட பொலிஸ் புலனாய்வு அலகின் அலுவலர்கள் 34 பேர் கொண்ட குழுவினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். 2021 ஆம் ஆண்டு நீதிமன்றங்களில் ஆஜராவது 1388 மேற்கொள்ளப்பட்டது.

**விசேட பொலிஸ் விசாரணை பிரிவுக்கு 1929 சிறுவர் உதவித் தொலைபேசி சேவை ஊடாக அல்லது வேறு முறைகளினால் அறிக்கையிடப்படும் முறைப்பாடுகள்**

| 2021.01.01 ஆம் திகதி முதல் 2021.12.31 வரை1929 அல்லது ஏனைய முறைகளில் கிடைக்கும் முறைப்பாடுகள் | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கிடைத்த தகவல்களின் எண்ணிக்கை | 8022 |
| 2 | வெளி பொலிஸ் நிலையங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் | 803 |
| 3 | சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு பதில் கிடைத்துள்ள எண்ணிக்கை | 5139 |
| 4 | விசாரணை முன்னேற்றத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ள எண்ணிக்கை | 2883 |
| | விசாரணை செய்யப்பட்ட மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 8022 |

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பொலிஸ் பிரிவின் ஊடாக விசாரணை நடாத்தப்பட்டு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டு வழக்குத் தாக்கல் செய்தல்**

சில சந்தர்ப்பங்களில் பிரதேச ரீதியான பொலிஸ் விசாரணைகள் தொடர்பில் திருப்தியடையாத பட்சத்தில், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் விசேட பொலிஸ்

விசாரணை பிரிவின் ஊடாக விசாரணைகளை நடாத்தி சந்தேக நபர்களை கைது செய்து வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

| 2021.01.01 ஆம் திகதி முதல் 2021.12.31 வரை மேற்கொள்ளப்பட்ட கடமைகள் | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | விசேட பொலிஸ் விசாரணை பிரிவினால் விசாரணை செய்யப்பட்ட குற்றச் செயல்களின் எண்ணிக்கை | 19 |
| 2 | விசேட பொலிஸ் விசாரணை பிரிவினால் விசாரணை செய்யப்பட்ட சிறு குற்றச் செயல்களின் எண்ணிக்கை (1995 இன் 22 ஆம் இலக்க இலங்கை தண்டனைச் சட்டக்கோவை சட்டத்தின் (திருத்திய 345) கீழ் கொள்ளப்படும் தவறுகள், பாதுகாப்பு மற்றும் பொறுப்பு | 02<br>04 |
| 3 | சட்ட மாஅதிபரின் ஆலோசனை கோரி தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட கோப்புக்களின் எண்ணிக்கை | 49 |
| 4 | தாக்கல் செய்யப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | 25 |

**விசேட பொலிஸ் விசாரணை பிரிவு சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யும் பணியை மேற்கொள்கின்றது.**

| 2021.01.01 ஆம் திகதி முதல் 2021.12.31 வரை மேற்கொள்ளப்பட்ட கடமைகள் | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பிற மாகாணங்களின் மேல் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 51 |
| 2 | கொழும்பு மேல் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 39 |
| 3 | பிற மாகாணங்களின் நீதவான் மேல் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 12 |
| 4 | கொழும்பு நீதவான் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 10 |
| 5 | பத்தரமுல்லை சிறுவர் நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 4 |
| | மொத்தம் | 116 |

**விசேட பொலிஸ் விசாரணை பிரிவின் அலுவலர்கள் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகளில் ஆஜராகின்றார்கள்.**

| **2021.01.01 ஆம் திகதி முதல் 2021.12.31 வரையான செயற்பணி** | | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | மேல் நீதிமன்றங்களில் ஆஜராகியுள்ள எண்ணிக்கை | 73 |
| 2 | நீதவான் நீதிமன்றங்களில் ஆஜராகியுள்ள எண்ணிக்கை | 353 |
| 3 | பத்தரமுல்லை சிறுவர் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எண்ணிக்கை | 193 |
| | மொத்தம் | 1279 |

**இலங்கை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை (இ.தே.சி.பா.அ)**

**டிசம்பர் 31 2021 உடன் முடிவடையும் நிதியாண்டுக்கான கணக்கீட்டு கொள்கைகள்**

**1. பொதுவான தகவல்கள்**

தே.சி.பா.அதிகாரசபையானது 1998ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது. இல. 330, தலவத்துகொட வீதி, மடிவெல, ஸ்ரீ ஜயவர்தனபுர எனும் இடத்தில் அதனது பிரதான அலுவலகம் அமைந்துள்ளது.

**2. முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கம்.**

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட பிரதான கணக்கீட்டு கொள்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்ட கொள்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு மாற்றமான கொள்கைகள் ஏதும் இருப்பின் அது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. நிதிக்கூற்றுக்கள் நிதி நிலைமை கூற்று( ஐந்தொகை), நிதிச்செயலாற்றுகை ( வருமான அறிக்கை), பங்குகளில் மாற்றம் பற்றிய கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன.

**3. தயாரிப்பிற்கான அடிப்படை**

நிதி அறிக்கைகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. 1972 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரிவு 8 (அ) (xxvi) மற்றும் பிரிவு 42 (ஊ) என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய தே.சி.பா. அதிகாரசபை இலங்கையில் வரி செலுத்த வேண்டியதில்லை. நிதிக்கூற்றுக்கள் வரலாற்று செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

**<u>தே.சி.பா.அதிகார சபை கீழ்வரும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை (இ.பொ.து.க.நி) பின்பற்றியுள்ளது.</u>**

**இ.பொ.து.க.நி. 1 - நிதிக்கூற்றுக்களை முன்வைத்தல்.**

இந்த நியமம் நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் கடந்தகால நிதிக் கூற்றுக்களோடும் ஏனைய நிறுவனங்களது நிதிக்கூற்றுக்களோடும் இணங்கிச் செல்வதனை உறுதிப்படுத்துவத்தும் வகையில் முன்வைக்கப்படுதல் வேண்டும் என்ற பொதுவான நோக்கத்தை குறிப்பிடுவதற்கானதாகும். இந்த குறிக்கோளை அடைந்து கொள்வதற்கு இந்த நியமம் நிதிக்கூற்றுக்களை முன்வைப்பதற்கான முழுமையான அக்கறை, அவற்றின் கட்டமைப்புக்கான வழிகாட்டல், திரண்ட அடிப்படையில் தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கத்திற்கான குறைந்தபட்ச தேவைப்பாடுகள் என்பவற்றை வரையறை செய்துள்ளது. குறிப்பான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஏனைய நிகழ்வுகளை அடையாளம் காணுதல், அளவிடுதல், வெளிப்படுத்தல் என்பவை வேறு இ.பொ.து.க.நியமங்களால் கையாளப்பட்டுள்ளது.

**இ.பொ.து.க.நி 2 - காசுப்பாய்ச்சல் கூற்று**

காசுப்பாய்ச்சல் கூற்று என்பது காசுப்பாய்ச்சலுக்கான மூலங்கள், அறிக்கையிடும் காலப்பகுதியில் காசு செலவிடப்பட்ட பொருட்கள் மற்றும் அறிக்கையிடும் திகதியிலுள்ளவாறான காசுமீதி என்பவற்றை அடையாளப்படுத்துகிறது. ஒரு நிறுவனத்தின் காசுப்பாய்ச்சல் பற்றிய தகவல் நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துபவர்களுக்கு பொறுப்பாண்மை, தீர்மானமெடுத்தல் நோக்கங்களுக்கான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு பயனளிக்கிறது.பொதுத்துறை நிறுவனமொன்று எவ்வாறு தனது செயல்பாடுகளுக்குத் தேவையான நிதியினை திரட்டுகிறது என்பதையும் குறித்த நிதி எந்த விதத்தில் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் உறுதிப்படுத்துவதற்கு காசுப்பாய்ச்சல் கூற்று அனுமதிக்கிறது. நிறுவனத்தினுடைய செயல்பாடுகளின் நீடித்த தன்மை போன்ற வள ஒதுக்கீடு பற்றிய தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் அதனை மதிப்பீடு செய்வதற்கும் பயனாளிகளுக்கு காசுப்பாய்ச்சல் கூற்றுக்களின் காலப்பகுதி மற்றும் அவற்றின் நிச்சயத்தன்மை என்பவை பற்றிய தெளிவு அவசியமாகிறது. இந்த நியமத்தின் குறிக்கோள் என்னவெனில், செயல்படுத்தல், முதலீடு செய்தல், நிதியளித்தல் நடவடிக்கைகள் முதலான காலப்பகுதியிலிருந்து காசுப்பாய்ச்சலை வகைப்படுத்தும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மூலம் ஒரு நிறுவனத்தின் காசு மற்றும் காசுக்குச் சமனானவையில் ஏற்படும் வரலாற்றுரீதியான மாற்றத்தைப் பற்றிய தகவல்களை வழங்குவதை தேவைப்படுத்துவதாகும்.

**இ.பொ.து.க.நி 3 - கணக்கட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றங்கள் மற்றும் தவறுகள்**

இந்த நியமம் கணக்கீட்டு முறைமை மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளிலும் கணக்கீட்டு மதிப்பீடுகளிலும் ஏற்படும் மாற்றங்களை வெளிப்படுத்தல் மற்றும் தவறுகளைச் சரிசெய்தல் என்பவற்றுடன் கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்தல், அவற்றை மாற்றுதல் என்பவற்றுக்கான பிரமாணங்களை குறிப்பிடுவதற்கானதாகும். ஒரு நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களின் பொருத்தப்பாட்டையும் நம்பகத்தன்மையையும் கடந்தகால நிதிக் கூற்றுக்களோடும் ஏனைய நிறுவனங்களது நிதிக்கூற்றுக்களோடும் இணங்கிச் செல்லும் தன்மையையும் மேம்படுத்துவதனை இந்நியமம் நோக்காகக் கொண்டுள்ளது.

1. தேய்மானம்

காணி தேய்மானத்திற்கு உட்பட்டதல்ல. ஏனைய சொத்துக்களுக்கான தேய்மானம் மதிப்பிடப்பட்டுள்ள அவற்றின் பயனுள்ள வாழ்நாளுக்கு ஏற்ப அவற்றின் கிரயத்தை ஒதுக்கீடு செய்வதற்காக நேர் கோட்டு முறையைப் பயன்படுத்தி கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கணிப்பிடப்பட்டுள்ளது. ஒரு ஆதனம், பொறி மற்றும் சாதனம் பயன்பாட்டிற்கு கிடைக்கக் கூடியதாக இருக்கும் போது அதனது தேய்மானம் ஆரம்பித்து அது ஐந்தொகையிலிருந்து நீக்கப்படும் வரை தொடரும்.

| | |
|---|---|
| கட்டிடம் | 2% |
| மோட்டார் வாகனங்கள் | 10% |
| அலுவலக தளபாடம் | 15% |
| அலுவலக உபகரணங்கள் | 15% |
| கணினி மற்றும் துணைக்கருவிகள் | 25% |
| விளையாட்டுப் பொருட்கள் | 15% |
| இசைக் கருவிகள் | 25% |
| விவசாய உபகரணங்கள் | 25% |

குறித்த நன்கொடை முகவருடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கைக்கு இணங்க, கருத்திட்ட நிதியினைப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட எந்தவொரு ஆதனம், பொறி மற்றும் சாதனத்தை தே.சி.பா.அதிகாரசபை உள்வாங்கவில்லை. கருத்திட்ட நிதியினூடாக கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் சாதனம் நன்கொடை முகவருக்குச் சொந்தமானதாகும். அவற்றின் உடைமை தே.சி.பா.அதிகாரசபைக்கு மாற்றப்படும் வரை கருத்திட்டங்களுக்கான பிரத்தியேக சொத்துப் பதிவேடு பேணப்படுகிறது.

2. கடன் தீர்ப்பு

காணிக்கான கடன் தீர்ப்பு குத்தகைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டது. ஏனைய சொத்துக்கள் தேய்மான வீதத்திற்கு சமமாக கீழ்வரும் வீதத்தில் கடன் தீர்ப்புக்கு உட்பட வேண்டும்.

| காணியின் விபரம் | குத்தகைக் காலம் (ஆண்டுகள்) |
|---|---|
| காணி (2000) | 50 |
| காணி (2016) | 30 |

| ஏனைய சொத்துக்கள் | கடன் தீர்ப்பு வீதம் |
|---|---|
| கட்டிடம் | 2% |
| மோட்டார் வாகனங்கள் | 10% |
| அலுவலக தளபாடம் | 15% |
| அலுவலக உபகரணங்கள் | 15% |
| கணினி மற்றும் துணைக்கருவிகள் | 25% |
| விளையாட்டுப் பொருட்கள் | 15% |

| | |
|---|---|
| இசைக் கருவிகள் | 25% |
| விவசாய உபகரணங்கள் | 25% |

**<u>கணக்கீட்டு குறிப்புகள்</u>**

**<u>குறிப்பு 01-: கடன் தீர்ப்பு</u>**

குறித்த கிரயங்களை ஈடு செய்யும் நோக்கில் வழங்கப்பட்ட மானியங்களுடன் தொடர்புடைய கிரயங்களை நிறுவனம் செலவாக அங்கீகரிக்கும் காலம் முழுவதும் மானியங்கள் ஒரு முறைப்படுத்தப்பட்ட ஒழுங்கில் இலாபம் அல்லது நட்டத்தில் அடையாளப்படுத்தப்படும்.

**<u>குறிப்பு 02-: எதிர்பாராத பொறுப்பு</u>**

அதிகாரசபையுடைய இடைநிறுத்தப்பட்ட ஒரு ஊழியர் தொடர்பில் எழும் சட்ட வழக்குகள் விடயத்தில் தே.சி.பா.அதிகாரசபை எதிர்பாராத பொறுப்பை கொண்டுள்ளது.

**<u>குறிப்பு 03-: ஒத்திவைக்கப்பட்ட வருமானம்</u>**

2021 ஆம் ஆண்டின் நிலையான சொத்துக்களுக்கு எதிரான வருடாந்த மூலதன மானிய கடன் தீர்த்தல் பெறுமானம் ஒத்திவைக்கப்பட்ட வருமான கணக்கில் குறிப்பு 1 பீ இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**<u>குறிப்பு 04-: திரண்ட செலவுகள்</u>**

